(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(13).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2016 சனவரி 12 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

## 2016 சனவரி 26, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

நுண்நிதியளிப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குவிதி,— (136 ஆம் அத்தியாயமான சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான கட்டளை,— 1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 (அ) ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதிய 1933/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைஅங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை (இல.1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 செத்தெம்பர் 17 ஆம் திகதிய 1932/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 செத்தெம்பர் 22 ஆம் திகதிய 1933/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 ஒற்றோபர் 01 ஆம் திகதிய 1934/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 ஒற்றோபர் 09 ஆம் திகதிய 1935/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 ஒற்றோபர் 28 ஆம் திகதிய 1938/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 நவெம்பர் 20 ஆம் திகதிய 1941/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

நிதி அமைச்சர்,— உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் போலந்து குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையில் வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரி விதிப்பனவை தவிர்ப்பதற்கும் வரி செலுத்தாது தட்டிக்கழிப்பதனைத் தடுப்பதற்குமாக 2015 ஒற்றோபர் 06 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தம் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 97(1) (அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2016 சனவரி 27, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

367/ '15

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) முள்ளிக்குளம் சமூகத்தின் சமூக பொருளாதார, கலாசார, சுற்றாடல், அரசியல் உரிமைகள் அழிக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் எதையும் எடுத்துச் செல்லாமல் உடனடியாக அவர்களின் வீடுகளை விட்டுச் செல்லுமாறு இராணுவம் கட்டளையிட்டது என்பதையும்;

(iii) அதன் நிமித்தமாக அவர்கள் கொடூரமாக தம் சொந்த இடங்களை விட்டு இடம்பெயரச் செய்யப்பட்டு கடும் துன்பங்களை அனுபவிக்கின்றனர் என்பதையும்;

(iv) தம் காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காக, முள்ளிக்குள மக்கள் பல வழிகளில் முயற்சித்துள்ளதுடன், சனாதிபதி, அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள் பின்னே சென்றுள்ளனர், ஆனாலும் அதிகாரிகள் அவற்றைக் கண்டு கொள்ளாதிருந்தனர் என்பதையும்;

(v) முள்ளிக்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமின் காரணமாக, 150 குடும்பங்கள் தம் சொந்த இடங்களை மீளப் பெற்றுக் கொள்ளும் நம்பிக்கையை இழந்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவர்களைத் தம் சொந்த இடங்களில் மீளக் குடியேற்றுவதற்கான விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவர்களது நீண்ட கால மனக்குறைகளை நிவர்த்திப்பதற்கு உட்கட்டமைப்பு மற்றும் கல்வி வசதிகள் வழங்கப்படுகிறதா என்பதையும்;

(iii) அவர்கள் மீளக் குடியேற்றப்படாதிருப்பின், அவர்களுடன் கலந்துரையாட மாற்றுக் காரணிகள் வழங்கப்படுகிறதா என்பதையும்;

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2016 பெப்புருவரி 10, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

50/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) இந்நாட்டுத் தேயிலையுடன் வெளிநாட்டுத் தேயிலை கலப்படம் செய்யப்பட்டு வெளிநாட்டுச் சந்தைக்கு அனுப்பப்படுகின்றதென்பதையும்;

(ii) தேயிலையில் இருக்கவேண்டிய தரம் வீழ்ச்சியடைந்துள்ளதென்பதையும்;

(iii) பல்வேறு பொருட்கள் கலப்படம் செய்யப்பட்ட தேயிலை ஏலவிற்பனைக்காக முன்வைக்கப்படுகின்றதென்பதையும்;

(iv) இதன் மூலமாக உலகில் முதலிடத்தை வென்றுள்ள Ceylon tea பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015.01.01 ஆந் திகதியில் உள்ளவாறு இந்நாட்டின் தேயிலை ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) இவர்கள் 2014 ஆம் ஆண்டில் ஏற்றுமதிசெய்த தேயிலையின் அளவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) தேயிலைச் சபையினால் தேயிலை உற்பத்திகளின் தரம் பற்றி பரிசோதிக்கின்ற முறையியல் யாது என்பதையும்;

(ii) தேயிலை உற்பத்திகளின் தரம் பற்றி குற்றஞ்சாட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய ஒருவருக்கு வழங்கக்கூடிய உயர்ந்தபட்சத் தண்டனை யாதென்பதையும்;

(iv) தண்டனை பெற்ற உற்பத்தியாளர்கள் மேற்படி (ஆ) (ii) பட்டியலில் உள்ளனரா என்பதையும்;

(v) இது சம்பந்தமாக நாட்டில் நிலவுகின்ற சட்ட ஏற்பாடுகள் போதுமானதாக அமைகின்றனவா என்பதையும்;

(vi) இன்றேல், அச்சட்டங்களை திருத்தத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி திருத்தங்கள் எவ்விதமாக எத்திகதியில் மேற்கொள்ளப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

240/ '15

கௌரவ பந்துல குணவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இடர் நிறையளிக்கப்பட்ட முறைக்கமைய இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் போதுமான தன்மை பற்றி திருப்தியடைகின்றாரா என்பதையும்;

(ii) சர்வதேச நாணய நிதியத்தின் இடர் நேர்வு அடிப்படையிலான நிறையேற்றலின் புதிய முறையின் பயன்பாட்டின் போது X, STD, OPL அத்துடன் M2 மாறிகளின் தரவுகளுக்கமைய 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், மிதக்கும் செலாவணி வீத முறையின் கீழ் வெளிநாட்டு ஒதுக்கங்களின் போதுமாந்தன்மை ஒவ்வொரு ஆண்டு வாரியாகவும் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டில் கடந்த 9 மாத காலத்தில் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் போதுமாந்தன்மை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையில் தாக்கத்தை ஏற்படுத்திய பிரதானமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2016 பெப்புருவரி 12, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 6/ '15

கௌரவ புத்திக பத்திரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/ '15

கௌரவ புத்திக பத்திரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ '15

கௌரவ புத்திக பத்திரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக் கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 10/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 11/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேர்தல்கள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 16/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுக்களை தாபித்தல்,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/ '15

கௌரவ புத்திக பத்திறண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 19/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 21 / '15

கௌரவ புத்திக பத்திறண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22 / '15

கௌரவ புத்திக பத்திறண,— புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.23/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.24/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.25/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.26/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.27/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.28/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் கருதுகின்றது.

பா.29/'15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.30/'15

கௌரவ புத்திக பத்திறண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.31/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.32/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.33/ '15

கௌரவ புத்திக பத்திறண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.34/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.35/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.36/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.37/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய மற்றும் சர்வதேச எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுத்தல்,— தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினரின் எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் தொடர்பாக எதிர்வுகூறலை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட உற்பத்திகள் சார்ந்த சகல துறைகளுடனான இடைத் தொடர்புகளின் ஊடாகவும் நவீன தொழிநுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தியும் உற்பத்திச் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.38/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு டிஜிடல் நூலகமொன்றை தாபித்தல்,— இலங்கை மக்களின் மரபார்ந்த அறிவை பாதுகாத்து, போஷித்து அதனை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்வதற்கும், மரபணு வளங்கள் மற்றும் உயிர் மரபுரிமைகளின் தவறான பயன்பாட்டை தடுப்பதற்காகவும் விரிவான தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாலும் சுற்றாடல், சுதேச மருத்துவத் துறை, கமத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் உள்ளடங்கலாக சகல துறைகளுக்கும் டிஜிடல் தொழிநுட்பத்துடனான நவீன நூலகமொன்றை தாபிப்பதற்கும், அதன் பொருட்டு உலக புலமைச்சொத்து அமைப்பு (WIPO ), இலங்கை புலமைச்சொத்து பணியகம், சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமை அலகு உள்ளடங்கலாக சகல துறைகளும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.39/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவைப் பேணிப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவு கையாளப்படும் மருத்துவ முறைகள், கமத்தொழில், உணவுப் பாதுகாப்பு, கைப்பணிக் கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் காணப்படும் மரபார்ந்த அறிவை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு, உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் உள்ளிட்ட ஏற்புடைய துறைகள் ஒருங்கிணைந்து தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.40/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைக்கே தனித்துவமானதும் மருத்துவ ரீதியில் பெறுமதிமிக்கதுமான தாவரங்களின் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தைப் பெற்றுக்கொள்ளல்,— வெளிநாடுகள் இலங்கைக்கே தனித்துவமான, பெறுமதிமிக்க மூலிகைத் தாவரங்களின் விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்தினைக் கண்டறிந்து, அவற்றிற்கு மோசடியான முறையில் ஆக்க உரிமம் பெறுவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்கும் ஔடத உற்பத்தி மற்றும் அதன் மேம்பாட்டிற்கு அக் கூறுகளைப் பயன்படுத்துவதற்கும் உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து நிறுவனங்களும் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.41/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களை கைவிடல்,— ஜனாதிபதி, பிரதம அமைச்சர் உள்ளிட்ட பாராளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சகல மக்கள் பிரதிநிதிகளும் மாதாந்தம் தாம் ஆற்றும் சேவைக்குரிய சம்பளம் மற்றும்/அல்லது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதுடன், மேற்படி எந்தவொரு பதவியும் தன்னலமின்றி மேற்கொள்ளப்படுகின்ற கௌரவ சேவைகளாக இல்லாமையினாலும், மேற்படி பதவிகளை வகிப்பவர்களின் பெயர்களுக்கு எதிரே அல்லது பதவிக்கு எதிரே அதிமேதகு, பிரபு அல்லது கௌரவ ஆகிய பெயர்கள் மற்றும் பெயருக்குப் பின்னால் அவர்கள் போன்ற பதங்களை பயன்படுத்துவதானது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளதனாலும், மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.42/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரித்தல்,— பல்வேறு தரப்பினரால் முதிய பிரசைகள் புறக்கணிக்கப்படுவதால் நேரிடுகின்ற அநீதிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.43/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.44/ '15

கௌரவ புத்திக பத்திறண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 45/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத் திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 47/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 48/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 49/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை/சுதேச சமையற்கலை தொடர்பில் நாட்டினுள் மக்கள் மனப்பான்மைகளை வளர்த்தல்,— இலங்கை/சுதேச சமையற்கலை பற்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே அதிக ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நாட்டினுள் மக்களின் மனப்பான்மைகளை இதன்மீது செலுத்துவதற்காக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் பாடநெறியில் சமையற்கலையை ஒரு பாடமாக சேர்ப்பதற்கும், அரச மற்றும் தனியார் துறை தலையீட்டின் அடிப்படையில் ஆராய்ச்சித் துறைகளை ஊக்குவிப்பதன் ஊடாக புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவும், இதனோடு தொடர்புடைய நிறுவன முறைமைகளை இணைத்து சான்றிதழ், டிப்ளோமா, பட்டம், பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை உருவாக்குவதன் மூலம் இத் துறை பற்றி மக்கள் மத்தியில் விரிவான விதத்தில் மனப்பான்மை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 50/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது சுவையூட்டல் மற்றும் கலவையாக்கல் கலை, சமையற்கலை, நிறமூட்டல், உணவு வெட்டுதல் உள்ளிட்ட பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதனோடு இணைந்துள்ள இலங்கையின் உணவுக் கலாசாரம் பற்றி கற்றல், கற்பித்தல் வழிமுறைகள் ஊடாக எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்கும் அதேபோன்று உள்நாட்டு, வெளிநாட்டு மக்களிடையே எமது உணவுக் கலாசாரத்தை பரப்புவதன் ஊடாக இலங்கையின் தனித்துவத்தை சர்வதேச ரீதியாக மேலோங்கச் செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களின் ஆராய்ச்சிகளுக்கான ஆய்வுக் கட்டுரைகளை அமைச்சுக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டு தயாரித்தல்,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்கள் தமது பாடநெறிகள் தொடர்பில் சமர்ப்பிக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துதல் முக்கியமானதாகையால், மேற்படி ஆய்வுக் கட்டுரைகளை மேற்பார்வை செய்யும் பேராசிரியர்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகள் ஏற்புடையதாகும் அமைச்சுக்களுக்கும் இடையில் சிறந்த தொடர்பினை ஏற்படுத்தும் முகமாக, குறித்த அமைச்சின் உத்தியோகத்தரொருவரை நியமிப்பதன் மூலம் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் மூலம் அமைச்சின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறை இலக்குகளை பூர்த்தி செய்யக் கூடிய விதத்திலான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமன இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 52/ '15

கௌரவ புத்திக பத்திறண,— 18 வயது நிரம்பியவுடன் தேருநர் இடாப்புகளில் பெயரைச் சேர்த்தல்,— தேர்தல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் தேருநர் இடாப்புகளைத் திருத்தும் திகதிக்கு பின்னர் அல்லது முன்னரான திகதியில் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களுக்கு உரிய வயது நிரம்பிய திகதியிலேயே தேருநர் இடாப்புகளில் தமது பெயரை சேர்க்கக் கூடிய விதத்தில் நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 53/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையினுள் சேலைன் உற்பத்திக்கான முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— இலங்கையினுள் வருடாந்தம் பாரியளவில் சேலைன் பயன்படுத்தப்படுவதுடன், சேலைன் இறக்குமதிக்காக பாரியளவு நிதி வருடாந்தம் வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுவதால், மேற்படி வெளிநாட்டுச் செலாவணியை நாட்டினுள் சேமிக்கும் நோக்கத்துடன், இலங்கையினுள் காணப்படுகின்ற உள்நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேலைன் உற்பத்தி செய்வதற்கு அரச, தனியார்துறை அல்லது கூட்டுறவுத்துறையை இணைத்துக் கொண்டு முறையானதொரு வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்டு புதிய உற்பத்திகளை உருவாக்குதல்,— இலங்கையில் வருடாந்தம் பெருமளவில் தேங்காய் நீர் விரயமாவதால், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தின் கீழ் தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்ட புதிய உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு உருவாக்குவதற்கான முறையியலொன்று அமுல்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 55/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கடலில் புதிய வளங்களை ஆய்வு செய்தல்,— மிகப் பெரிய கடற் பிராந்தியத்தைக் கொண்டுள்ளதொரு நாடான இலங்கை, மீன்பிடிக் கைத்தொழிலுக்கு மாத்திரம் முன்னுரிமையளித்துள்ளதோடு, கடல் சார்ந்ததாக பெருமளவு இயற்கை வளங்கள் காணப்படுவதால், நாட்டுக்கு பெரும் எண்ணிக்கையிலான தொழில்வாய்ப்புகளையும், செல்வத்தையும் ஈட்டும் நோக்கத்துடன் கடல் வளங்கள் தொடர்பாக முறைசார்ந்த மேலதிக ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 56/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் மீன் வளத்தை வெளிநாட்டவர்கள் பிடிப்பதைத் தடுத்தல்,— இலங்கையின் மீனவர்களுக்கு பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்துகின்ற வகையில் இலங்கை கடற் பிராந்தியத்திலுள்ள மீன் வளம் வெளிநாட்டவர்களினால் பிடிக்கப்படுவதால், இலங்கை கடற் பிராந்தியத்தில் மீன் பிடிப்பதையும், வெளிநாட்டுப் படகுகள் மீன் பிடிப்பதற்கான இறங்குதுறையாக பயன்படுத்துவதையும் தடுப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 57/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பலா உற்பத்தியை அதிகரிக்கச் செய்து அது சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்,— மிகவும் சுவையானதும், மருத்துவக் குணம் கொண்டதும், இரசாயனப் பதார்த்தங்கள் இன்றி பயிரிடக் கூடியதுமான பலாச் செய்கையை விஸ்தரிப்பதன் ஊடாக அது சார்ந்த உற்பத்திகளை அதிகரிக்கச் செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணியை எமது நாட்டினால் ஈட்டிக்கொள்ள முடியுமாயுள்ளதால், அது தொடர்பில் அரசாங்கத்தின் தலையீட்டுடன் முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 58/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்றை வருடாந்தம் ஒழுங்குசெய்தல்,— ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனில், முக்கியமாக கமத்தொழிலில் செழிப்புற்றிருத்தல் வேண்டுமென்பதால், நாட்டை வளப்படுத்தும் கமக்காரர்களுக்கு தமது தொழில் தொடர்பாக அபிமானம் ஏற்படும் வகையில் முறைசார்ந்ததொரு ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 59/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சலுகை விலையில் LED மின்குமிழிகளை நுகர்வோருக்கு வழங்குதல்,— இல்லங்களை ஒளியூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தரம் மிக்க LED மின்குமிழிகளின் விலை அதிகம் என்பதால், மின்சார சபை தலையிட்டு சலுகை விலையிலும் தவணைக் கொடுப்பனவு முறையிலும் இந்த மின் குமிழிகளை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுத்து தேசிய ரீதியில் பெருமளவில் மின்சாரத்தை சேமிப்பதற்கும், LED மின்குமிழிகளை மக்கள் மத்தியில் பிரபலய்படுத்துவதன் மூலம் மின்சார சபைக்கு மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கும் இயலுமானவாறு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 60/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சிறிய அளவிலான விளையாட்டுப் பொருட்கள் தொழிற்சாலைகளை விஸ்தரித்தல்,— இலங்கையினுள் விளையாட்டுப் பொருட்களுக்கு பாரியதொரு சந்தை காணப்பட்ட போதிலும், நாட்டினுள் அவை சிறிய அளவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்ற அதேவேளை, அதற்காக சீனா முதற்கொண்ட ஏனைய நாடுகளுக்கு பெருந்தொகை வெளிநாட்டுச் செலாவணி பாய்ச்சப்படுவதால், சிறியதொரு செலவினத்தை ஏற்க வேண்டியதான இக் கைத்தொழிலை கிராமியப் பிரதேசங்களில் விஸ்தரிக்கும் பொருட்டு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 61/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையில் மருந்தாக்கல் தொழிற்சாலைகளை ஆரம்பித்தல்,— இலங்கையில் மருந்தாக்கலானது தற்போது ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாலும், மருந்துகளின் இறக்குமதிக்கென வருடமொன்றில் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணி செலவிடப்படுவதாலும், முன்னேற்றமடைந்த மனித வளத்தைக் கொண்டதொரு நாடு என்ற வகையில் இலங்கைக்கு அத்தியாவசியமான மருந்து வகைகளை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்வதற்கான வசதிகளை அரசாங்கத்தின் தலையீட்டுடன் பெற்றுக்கொடுத்து மருந்தாக்கல் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 62/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலை பாடத்திட்டத்தில் உளவியல் பாடத்தைச் சேர்த்தல்,— பாடசாலை மாணவர் சமுதாயத்தை ஆரோக்கியமான மனநிலை கொண்ட, சாதுரியமான முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாக தயார்படுத்தும் பொருட்டு ஆறாம் தரத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பௌத்த உளவியல் மற்றும் மேலைத்தேய உளவியல் ஆகிய இரண்டு பாடங்களையும் ஒருங்கிணைத்து முறையாக தயாரிக்கப்பட்ட "உளவியலும் தியானமும்" என்ற பெயரில் ஒரு பாடத்தை பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 63/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஓய்வுபெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைத்தல்,— ஓய்வு பெற்றவர்களுக்கான உளவள ஆலோசனைச் சேவைகள், மருத்துவ வசதிகள் மற்றும் பகல்நேர காப்பக சேவைகள் ஆகிய வயோதிகர்களுக்குத் தேவையான பல்வேறு நலன்புரிச் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைப்பதற்கும், மேற்படி நிலையங்களை மையப்படுத்தி ஏதேனும் உற்பத்தி நடவடிக்கையில் ஓய்வு பெற்றவர்களை ஈடுபடுத்துவதன் ஊடாக அவர்களின் வாழ்க்கைக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கின்ற அதேவேளை, மேலதிக வருவாயை ஈட்டிக்கொள்ளக் கூடிய வகையிலும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் நாடு முழுவதிலும் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 64/ '15

கௌரவ புத்திக பத்திறண, — ஓய்வுபெற்றவர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்தல்,— ஓய்வு பெற்றுள்ள அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கும், அவர்களுடைய நலன்புரி நடவடிக்கைகளுக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 65/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவித்தல்,— சுற்றுலாப் பயணிகளுக்கு பயன்மிக்கதும், கண்ணியம் மிக்கதுமான சேவையை வழங்குபவர்களாக ஆக்குவதற்கும் மேலும் இவர்களது வாழ்க்கைத் தொழில் மட்டத்தை உயர்த்துவதற்குமாக சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவிப்பதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 66/ '15

கௌரவ புத்திக பத்திறண,— காணி தொடர்பில் வலுவிலுள்ள சட்டங்களைத் திருத்துதல்,— இலங்கையில் தற்போது போலியான உறுதிகளைத் தயாரித்து காணிகளை விற்பனை செய்யும் மோசடிச் செயலொன்று நடைபெற்று வருவதோடு, இவ்விடயம் தொடர்பில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால், காணி உரிமை பற்றிய பாதுகாப்பு மேம்படுத்தப்படும் வகையிலும், தவறாளிகளுக்கு கடுமையான தண்டனைகளை வழங்கக்கூடிய வகையிலும் வலுவிலுள்ள சட்ட முறைமை திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 67/ '15

கௌரவ புத்திக பத்திறண, — இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் பவளப்பாறைகளை பாதுகாத்தல்,— இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் அமைந்துள்ள பவளப்பாறைகள் மனிதர்களின் செயற்பாடுகளால் அழிவுறும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதால், மேற்படி பவளப்பாறைகளை பாதுகாப்பதற்காக மனித செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கேற்றவாறு தனிநபர் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தையும் சட்ட வரையறையில் மாற்றத்தையும் ஏற்படுத்துவதற்காக கல்விமான்கள் குழுவொன்றின் ஊடாக பொருத்தமான வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 68/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான்களில் பெண்களை சேவைக்கு அமர்த்துதல்,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும் மேற்படி வான்களில் பயணிக்கின்ற பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருதியும் சகல பாடசாலை வான்களிலும் பணியாற்றுவதற்கு பெண்கள் அமர்த்தப்படுவதை கட்டாயமாக்குவதற்கான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 69/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மருந்துப் பொருட்களின் விலையை குறைத்தல்,— இலங்கையினுள் தேசிய ஔடதக் கொள்கையினை பிரகடனப்படுத்தி, ஔடதங்களின் பெயரில் மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை துரிதமாக ஆரம்பிப்பதன் மூலம் மருந்துப் பொருட்களின் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தலையிடுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 70/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இணையத் தளத்தின் ஊடாக நடைபெறுகின்ற மருந்துப் பொருட்கள் விற்பனை உள்ளிட்ட மோசடிச் செயல்களைத் தடுத்தல்,— தற்போது இணையத் தளத்தின் ஊடாக தரமற்ற மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மேனிவணப்புப் பொருட்களின் உற்பத்திகள் பாரியளவில் விற்பனை செய்யப்படுவதுடன், இத்தகைய மோசடிச் செயல்கள் எமது நாட்டு மக்களின் ஆரோக்கியத்துக்கும் நல்லிருப்புக்கும் பாரியதொரு அச்சுறுத்தலாகும் என்பதால், இவற்றைத் தடுப்பதற்கான உரிய வேலைத் திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துதல் உகந்ததாகுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 71/ '15

கௌரவ புத்திக பத்திறண,— விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனையின்றி பயிர்ச் செய்கை செய்தல்,— அதிக நச்சுத்தன்மையுடைய விவசாய இரசாயனப் பொருட்களை இலங்கையில் தடை செய்து, பழைமைவாய்ந்த முறையில் சூழலுக்குகந்த பயிர்ச்செய்கை முறையொன்றை நாட்டில் அறிமுகம் செய்வதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு விவசாய விஞ்ஞானிகள் மற்றும் சூழலியலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து அவர்களிடமிருந்து பெறப்படும் பரிந்துரைகளின் ஊடாக மக்களுக்கு நச்சுத்தன்மையற்ற ஆரோக்கியமான உணவை பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் பொருத்தமாகுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 72/ '15

கௌரவ புத்திக பத்திறண,— போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாவதிலிருந்து பாடசாலை மாணவர்களை மீட்டெடுத்தல்,— தற்போது இலங்கையில் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்ற போக்கு அதிகரித்துள்ளதால், பாடசாலை மாணவர்களை போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுப்பதற்காக அரசாங்கம் தலையிட்டு முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 73/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை நியமித்தல்,— அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டங்களின் போது தமது நிறுவனங்களை மிகஉயர்ந்த உற்பத்தித்திறன் மட்டத்தை நோக்கி வழிநடாத்தியுள்ள நிறுவனத் தலைவர்களை இனங்கண்டு அவர்களின் அறிவையும், அனுபவங்களையும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில், அந்நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முறையியல்களை ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்றவகையில் பதிலீடு செய்யக்கூடியவாறு மேற்படி நிறுவனத் தலைவர்களை உள்ளடக்கியதாக தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை தாபித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 74/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சமுதாய மருத்துவமுறை பற்றிய நிபுணத்துவச் சேவையை மேம்படுத்தல்,— சுகாதார சேவையின் அத்தியாவசிய பிரிவொன்றான சமுதாய மருத்துவமுறை தொடர்பான நிபுணத்துவத்துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அத்துறையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து துரிதமாக தீர்த்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 75/ '15

கௌரவ புத்திக பத்திறண, — ஆங்கிலேயர்களால் தேசத் துரோகிகளாக வர்ணிக்கப்பட்ட இலங்கையர்களை தேசிய வீரர்களாக பிரகடனம் செய்தல்,— 1815 ஆம் ஆண்டு தொடக்கம் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெறுதல் வரையான காலப்பகுதியில் ஆங்கிலேயர்களுக்கெதிராக நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் உயிரையும் பொருட்படுத்தாது போராடிய இலங்கையர்கள் தேசத் துரோகிகளாக வர்ணிக்கப்பட்டுள்ளதோடு, இவர்கள் அனைவரையும் விசேட வர்த்தமானப் பத்திரிகையொன்றின் மூலம் தேசிய வீரர்களாக பிரகடனம் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.76/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் சந்தைக்கு வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல்,— நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற, சந்தைப் படுத்துகின்ற மற்றும் அதற்குப் பக்கபலமாக உள்ள ஆட்கள் மற்றும் நிறுவனங்களை சுற்றிவளைப்பதற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் விசேட சுற்றிவளைப்புப் பிரிவுக்குக் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து, தேவையான வசதிகளை குறைவின்றி பெற்றுக்கொடுப்பதற்கும், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கக் கூடிய வகையில் வலுவிலுள்ள சட்ட முறைமையை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.77/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நச்சுத்தன்மையற்ற உணவுற்பத்தியை ஊக்குவித்தல்,— உணவுடன் தொடர்புடைய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களை இலக்காகக் கொண்டு, தரத்தில் உயர்ந்ததும், ஆரோக்கியமானதுமான உணவுகளை நுகர்வோருக்கு வழங்குவதன் மூலம் நாட்டுக்கு ஆற்றக்கூடிய சேவை தொடர்பாக விழிப்புணர்வூட்டி, மனோபாவ ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், அவ்வாறு நச்சுத்தன்மையற்ற உணவுகளை உற்பத்தி செய்கின்ற தொழில்முயற்சியாளர்களுக்கு கௌரவப் பட்டத்துடன்கூடிய விருது வழங்கி அவர்களை ஊக்குவிப்பதற்குமான வேலைத் திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.78/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முறைகேடான விதத்தில் கைப்பற்றப்பட்டுள்ள சரணாலயங்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்தல்,— இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சரணாலயங்களுக்குச் சொந்தமான காணிகள் பல்வேறான ஆட்கள் மற்றும் அமைப்புகளால் சட்ட விரோதமான முறையில் கைப்பற்றப்பட்டுள்ளதால், மேற்படி காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் துரிதமாக தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 79/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆதிவாசி மக்களின் மேம்பாட்டுக்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையினுள் தற்போது வசிக்கும் ஆதிவாசி மக்கள் பற்றிய தனியானதொரு தொகை மதிப்பீட்டை மேற்கொண்டு, அவர்கள் உயிர் வாழ்வதில் தற்போது எதிர்நோக்கும் சிரமங்களை முறைசார்ந்த விதத்தில் இனங்கண்டு, அவர்கள் கௌரவமாக வாழக் கூடிய ஒரு சூழலை அமைத்துக் கொடுப்பதற்குத் தேவையான சாதகமானதொரு திட்டத்தை, ஆதிவாசிகளின் தலைவர்களும் உள்ளடங்கிய விதத்தில் நியமிக்கப்பட்ட கல்விமான்கள் குழுவொன்றின் ஊடாக நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 80/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் யுத்தத்தினால் சேதமடைந்த தொல்பொருட்களை பாதுகாத்தல்,— முப்பது ஆண்டு கால யுத்தம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட தொல்பொருட்கள் பெருமளவில் அழிவடைந்ததோடு, இருப்பிலுள்ள தொல்பொருட்கள் பற்றிய மதிப்பீடொன்றை மேற்கொண்டு தகவல்களை திரட்டுவதையும், குறித்த தொல்பொருட்களை உறுதி செய்தல், பாதுகாத்தல் மற்றும் புனரமைப்பதையும் நோக்கமாகக் கொண்டு தொல்பொருளியலாளர்களை உள்ளடக்கிய கல்விமான்கள் குழுவொன்றை நியமித்தல் உசிதமாகுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.81/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பயிர்ச் செய்கைக்கான உள்நாட்டு விதைகளை பிரபல்யப்படுத்துதல்,— விவசாய இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படாது உள்நாட்டு சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி பயிரிடக்கூடிய உள்நாட்டு விதை வகைகளை இனங்கண்டு அத்தகைய விதைகளை துரிதமாக நாடுபூராவும் பரவலாக்கி இரசாயன நச்சுத்தன்மையற்ற உணவுப் பொருட்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள், தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்குத் தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 82/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டு மொழிகள் கற்கைக்கான வசதிகளை வழங்கல்,— தனி நபர் அறிவாற்றலை தீர்மானிப்பதற்கு அவரிடமுள்ள மொழியறிவு முதன்மையான காரணியாக அமைவதால் ஆங்கில மொழி தவிர்ந்த ஏனைய முதன்மையான அந்நிய மொழிகளை கற்பதற்குத் தேவையான வசதிகளை விஸ்தரிப்பதற்குத் தேவையான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 83/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அனைத்து தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் செலவிடப்படுகின்ற நிதியை மட்டுப்படுத்தல்,— இலங்கையினுள் நடைபெறுகின்ற அனைத்து தேர்தல்களின் போதும் சில வேட்பாளர்கள் பாரியளவில் நிதியை செலவிடுவதுடன், நிதி செலவிட முடியாத போதிலும், நாட்டுக்கு சேவையாற்றக்கூடிய கல்விமான்கள் சிலருக்கு இதனால் பாதகமான நிலைமை ஏற்படுவதன் காரணமாக தேர்தல்களுக்கு செலவிடப்படுகின்ற நிதியின் அளவை மட்டுப்படுத்தக்கூடியவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.84/ '15

கௌரவ புத்திக பத்திறண,— காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட தொல்பொருட்களை மீண்டும் பெற்றுக் கொள்ளல்,— இலங்கை காலனித்துவ நாடாக காணப்பட்ட காலத்தில் எமது நாட்டிலிருந்து போர்த்துக்கள், ஒல்லாந்து மற்றும் பெரிய பிரித்தானியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட தொல்லியல் பெறுமதிமிக்க பொருட்கள் பற்றிய ஆய்வொன்றை நடாத்தி அப்பொருட்களை மீண்டும் எமது நாட்டுக்குப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 85/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிக்குமார் நீதிமன்றமொன்றை தாபித்தல்,— பிக்குமார்களின் பாதுகாப்பு மற்றும் கௌரவத்தை பேணிப்பாதுகாப்பதற்காக அவர்கள் தொடர்பான நீதிமன்ற விடயங்களுக்காக தனியான பிக்குமார் நீதிமன்றமொன்றை தாபித்தல் வேண்டுமெனவும் அந்த நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு சட்ட ரீதியிலான அதிகாரத்தைப் பெறக்கூடிய வகையில் மேற்படி பிக்குமார் நீதிமன்றம் தாபிக்கப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 86/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நியதிச்சட்ட பிக்குமார் சபையொன்றை நியமித்தல்,— பாராளுமன்றம் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்கும் கட்டளைச் சட்டங்களுக்கு திருத்தங்களை முன்வைக்கக் கூடியதுமான சட்ட அதிகாரமுள்ள பிக்குமார்களின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்பட்ட பொதுநிர்வாகம், சட்டம், வெளிநாட்டலுவல்கள் மற்றும் சமூக செயற்பாடுகள் தொடர்பாக சிறந்த அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள கல்விமான்களான பிக்குமார்களை உள்ளடக்கிய நியதிச்சட்ட பிக்குமார் சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 87/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நீர்ப்பாசனக் கலாசார கற்கை நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கையில் காணப்பட்ட நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்திற்கும், வாவிகள் தொழில்நுட்பத்திற்கும் புத்துயிரூட்டி பேணிப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், கற்கை நெறிகள் மூலம் மேற்படி விடயம் தொடர்பில் அறிவு நிறைந்தவர்களை உருவாக்க இயலுமான வகையில் "நீர்ப்பாசனக் கலாசார கற்கை நிலையம்" என்ற பெயரில் நிறுவனமொன்றை அரசாங்கத்தின் தலையீட்டுடன் ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 88/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— மகாவம்ச கற்கைக்கான நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கை வரலாற்றின் சுவடாக விளங்கும் மகாவம்சத்தைக் கற்பதற்காக பிக்குமாரின் தலையீட்டுடன் “மகாவம்சக் கற்கை ஆய்வு தேசிய நிறுவனம்” என்ற பெயரில் நிறுவனமொன்றை அரசாங்கத்தின் அனுசரணையுடன் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 89/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— பௌத்த விரோத செயற்பாடுகளை தடுத்தல்,— அற நூல்கள் மற்றும் வெளியீடுகளை ஆய்வு செய்யும் மேன்மையான அறிவைக் கொண்ட சட்ட அதிகாரத்துடன் கூடிய கற்றோர்களைக் கொண்ட சங்க சபையொன்றை தாபிப்பதன் மூலம், ஏதேனுமொரு ஆக்கத்தை வெளியிடுவதற்கு முன்னர் அதனை மேற்படி சபைக்கு சமர்ப்பித்ததன் பின்னர், சமூகமயமாக்குவதற்கு தகுதியில்லை எனில், திருத்தங்களை சமர்ப்பிப்பதற்கேற்றவாறான பொறிமுறையொன்றை உருவாக்குவதன் மூலம் பௌத்த விரோத செயற்பாடுகள், வெளியீடுகள் இயற்றப்படுதல் மற்றும் பௌத்த தர்மத்தை தொடர்புபடுத்தி பொய்யான வரைவிலக்கணங்கள் தோற்றம் பெறுவதை தடுப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 90/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— தேசப்பற்றுடைய கலைப் படைப்புகளை பாராட்டுதல்,— தேசத்தின் மீது அன்பு மற்றும் சுயமரியாதை ஏற்படும் வகையில் சுதேச மற்றும் கலாசார விழுமியங்களுடன் கூடிய கலைப் படைப்புகளை வருடாந்தம் கௌரவிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 91/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் பாடசாலை மாணவ மாணவியர்களின் ஒழுக்கத்தை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— இலங்கையின் பாடசாலை மாணவ மாணவியர்களை ஆரோக்கியமான, உடல் நலம்மிக்க மற்றும் உடலுறுதி கொண்ட பிரஜைகளாக சமூகமயப்படுத்தும் நோக்கத்துடன் அவர்கள் தாம் விரும்பும் ஒரு விளையாட்டில் ஈடுபடுவதற்கும், நடைமுறை ரீதியிலான ஒழுக்கப் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் வகுக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 92/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— பௌத்த கலாசார தகவல் நிலையமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையினுள் அமைந்துள்ள பௌத்த மதத் தலங்கள், அதனுடன் இணைந்த இடைநேர்விளைவான பிரிவுகள் மற்றும் பௌத்த தேரர்கள் பற்றிய தகவல்களை சேகரித்து, முறைசார்ந்த ரீதியில் கணனிமயப்படுத்தி, நவீன தொழில்நுட்ப கருவிகள், போதியளவு மனித மற்றும் பௌதீக வளங்கள் நிறைந்த “பௌத்த கலாசார தகவல் நிலையம்” எனும் பெயரிலான நிறுவனமொன்று அரசின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 93/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— அறநெறிப் பாடசாலை பாடநூல்களை காலத்திற்கேற்ப திருத்துதல்,— பரீட்சையை இலக்காகக் கொண்ட,— அறிவை மட்டும் மையப்படுத்திய பாடநூல்களுக்குப் பதிலாக செய்முறைப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட, அறிவை வளர்க்கக்கூடியதான, நாகரிகமானதொரு சமூகம் உருவாக்கப்படுவதை இலக்காகக் கொண்ட பாடநூல்களை புத்திஜீவிகளை உள்ளடக்கிய சபையொன்றின் ஊடாக தொகுத்து அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 94/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சர்வதேச பாடசாலைகளின் ஒழுங்குமுறையாக்கலுக்கான சபையொன்றை நியமித்தல்,— இலங்கையின் கலாசாரத்திற்கும், பண்பாட்டுக்கும், சமூக நல்லிருப்புக்கும் பொருந்தக்கூடிய வகையில் சர்வதேச பாடசாலைகளின் விடயப்பரப்புகளை தேவைக்கேற்ப ஒழுங்குமுறையாக்கக்கூடிய முழுமையான அதிகாரத்துடன் கூடிய சபையொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 95/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய கல்வி ஆணைக்குழுவை மென்மேலும் முனைப்புடன் செயற்படச் செய்தல்,— சுதேச வரலாற்று அறிவு, பண்பாடுமிக்கதன்மை, உற்பத்திச் சாத்தியத்தன்மை, அறிவுடைமை, பாரம்பரிய அறிவு, தேசப்பற்று, ஆரோக்கியம், திறமைமிக்கதன்மை மற்றும் சிறந்த மனப்பாங்குகளைக் கொண்டிருத்தல் ஆகிய பண்புகளின் மூலம் பூரணத்துவம்மிக்க வெற்றிகரமான பிரசைகளை உருவாக்கக்கூடியவாறு அமைக்கப்பட்ட தேசிய கொள்கையின் ஊடாக ஒட்டுமொத்த கல்வித் திட்டத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவை மென்மேலும் முனைப்புடன் செயற்படச் செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.96/ '15

கௌரவ புத்திக பத்திறண,— குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணர் சேவையை மேம்படுத்தல்,— சுகாதார சேவையின் அத்தியாவசிய அம்சமொன்றான குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணத்துவத் துறையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து அவற்றை துரிதமாக தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மேற்படி குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணர் சேவையை மேம்படுத்துவதற்குமான திட்டங்களை வகுப்பதற்கும் பொருட்டு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 97/ '15

கௌரவ புத்திக பத்திறண, — ஆயுர்வேத மருத்துவர்களின் சேவையை வெளிநாடுகளுக்கு வழங்குதல்,— ஆயுர்வேத மருத்துவப் பட்டப்படிப்பை நிறைவுசெய்யும் பட்டதாரிகளுக்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக முறைசார்ந்த வேலைத் திட்டமொன்றை அமைத்து நடைமுறைப்படுத்தல் உசிதமாகுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 98/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆயுர்வேத மருத்துவச் சட்டத்தை திருத்துதல்,— தற்போது வலுவிலுள்ள காலம் கடந்த ஆயுர்வேத மருத்துவச் சட்டம் மீதான திருத்தமொன்றைக் கொண்டு வந்து ஆயுர்வேத மருத்துவர்களின் தொழில் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்து, அந்த தொழிலுக்குரிய கௌரவத்தையும், மகத்துவத்தையும் பாதுகாக்க புதிய ஆயுர்வேத மருத்துவச் சட்டமொன்றை துரிதகதியில் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 99/ '15

கௌரவ புத்திக பத்திறண, — புகையிரத பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்குதல்,— இலங்கையில் புகையிரத பாதுகாப்பு முறைமையை உருவாக்கிய புத்தாக்குநர்களையும், அத் துறையுடன் தொடர்புடைய கல்விமான்களையும், புகையிரதத் திணைக்களத்தின் சகல துறைகளினதும் விற்பன்னர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் புகையிரத பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 100/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பயணிகள் போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்தல்,— பேருந்து பயணிகள் போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம், வருடாந்தம் அச் சேவையை நிராகரிக்கின்ற சுமார் 1% - 2% பயணிகளை தக்க வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம், அச் சேவையின் இருப்புக்கு நீண்ட கால அடிப்படையில் ஏற்படக்கூடிய ஆபத்தை குறைப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் பொருத்தமாகுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 101/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சிங்கள மொழிக்கு நியதியொன்றை வகுத்தல்,— சிங்கள மொழியில் எழுத்து வழக்கு மற்றும் பேச்சு வழக்கு இரு வகைகளை கொண்டுள்ளதோடு, න, ණ, ල, ළ வேறுபாடு, மெல்லின, வல்லின எழுத்துக்களை பயன்படுத்தல் மற்றும் சொல் வகைப்பாடு ஆகியன விவாதத்துக்குரியவையாக உள்ளதால் சிங்கள மொழிக்கென நியதியொன்றை வகுப்பதற்கு கல்விமான்கள் சபையொன்றை நியமித்து காலத்துக்கேற்ப ஏற்படும் மாற்றங்களையும் கவனத்திற்கொண்டு மொழியின் நிலைத்திருத்தலை உறுதிப்படுத்தக்கூடிய செயற்பாடொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.102/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உக்கிப்போகாத சேதனக் கழிவுப்பொருட்களின் மூலம் சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துதல்,— பீடை கொல்லிகள் மற்றும் கைத்தொழில் செயற்பாடுகளிலிருந்து வெளியேறும் உக்கிப்போகாத சேதனக் கழிவுப்பொருட்கள் (Persistent Organic Pollutants – POPs ) பன்னிரண்டு வகை மாசாக்கல் காரணிகளை உள்ளடக்கியுள்ளதுடன், இவை மனிதனின் உடல் நலத்துக்கு மிகவும் பாதகமாயுள்ளதால், குறித்த இரசாயனப் பதார்த்தங்கள் சுற்றாடலுக்கு வெளியேற்றப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு முறைசார்ந்த ஒரு வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.103/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அரசாட்சியில் பௌத்த தத்துவங்களை சேர்த்தக்கொள்ளல்,— சப்த அபரிஹானீய தர்ம, தச ராஜ தர்ம, ராஜோவாத ஜாதகய, குரு தர்ம ஜாதகய, கண்ட நிந்துக ஜாதகய, தெசதுர ஜாதகய, தேவதர்ம ஜாதகய, சதர சங்ரஹ வஸ்து, சக்கவத்தீ சிஹநாத சூத்ரய மற்றும் தர்ம பிரதீபிகாவ ஆகிய பௌத்த கற்பித்தல்கள் தொடாபில் பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் பிரதேச மட்டத்திலான சகல ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டுவதன் ஊடாக நாட்டின் நல்லாட்சிக்கு அவர்களது வகிபாக பங்களிப்பினை பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்திலான ஒரு வேலைத்திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 104/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலத்திரனியல் கழிவுகளை அகற்றுதல்,— புளோரசன்ட் மின்குமிழ், தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, மின் உபகரணங்கள், பட்டரி, கனணி மற்றும் அவற்றின் பாகங்கள் கழிவுப் பொருட்களாக சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுகையில் ஆசனிக், கட்மியம், பாதரசம் மற்றும் ஈயம் ஆகிய கன உலோகங்கள் சுற்றாடலில் சேர்க்கப்படுவதால், குறித்த இலத்திரனியல் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை தயாரித்து சுற்றாடலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 105/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டில் நல்லாட்சியை தாபித்தல்,— சீரற்ற ஆட்சியின் பண்புகளான தான்தோன்றித்தனமான கொள்கையாக்கம், அதிகாரவாதம், அமுலாக்கப்படாத மற்றும் அநீதியான சட்டங்கள், நிறைவேற்று அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல், அரசியலில் பிரஜைகளின் பங்களிப்பு குறைவடைதல் மற்றும் ஊழல் பரவுதல் ஆகிய விடயங்களை எமது நாட்டில் குறைவின்றிக் காணக்கூடியதாக உள்ளதோடு, இதன் காரணமாக நாட்டில் சீரற்ற ஆட்சி நிலவுகின்றமை தென்படுகின்றமையால், நாட்டில் நல்லாட்சியை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 106/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாடுகளிலுள்ள இலங்கைக்கு சொந்தமான சுவடிகளை மீளப்பெற்றுக்கொள்ளல்,— இலங்கைக்கு சொந்தமான பெறுமதியான பல சுவடிகள் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் காணப்படுவதுடன், இவற்றில் உள்ளடங்கியுள்ள அறிவை தற்போதைய இலங்கை சமூகம் இழந்துள்ளமையால், மேற்படி சுவடிகளை எமது நாட்டுக்கு மீளப் பெற்று இவற்றில் அடங்கியுள்ள புராதன அறிவை சமூகமயமப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது

பா. 107/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயிர் பல்வகைத்தன்மையை பாதுகாப்பதற்காக கமத்தொழிலின் பங்களிப்பைப் பெறுதல்,— தனிப் பயிர்ச்செய்கை முறைக்கு பதிலாக பல்வகைப் பயிர்ச்செய்கை முறை மற்றும் கலப்புப் பயிர்ச்செய்கை முறையை பிரபல்யபடுத்தல், உயிர் பல்வகைத்தன்மைக்கு கேடு விளைவிக்கும் இரசாயன பதார்த்தங்களை கமத்தொழிலிருந்து நீக்குதல் மற்றும் ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவ முறைமைகளை பயன்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக நாட்டில் உயிர் பல்வகைத்தன்மையை பாதுகாப்பதில் விவாசாயிகளை ஈடுபடுத்துகின்றதான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 108/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மக்களின் உணவு கிடைக்கும் உரிமையை பாதுகாத்தல்,— ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் கட்டமைப்புக்களுக்கு அமைய உணவு கிடைப்பதற்கான அடிப்படை உரிமையை இலங்கை மக்கள் இழக்கும் நிலைமை, அரசாங்க கொள்கை வகுத்தல் மற்றும் அமுல்படுத்துவதில் காணப்படுவதாலும், மேற்படி சமவாயங்களுக்கு அமைய நாட்டு மக்களின் உணவுப் பிரச்சினையை தீர்த்து வைக்கும் பொறுப்பு முற்றாக அரசாங்கத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாலும் அரசாங்கம் தலையீடு செய்து உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துகின்ற மற்றும் சுகாதார ரீதியில் பாதுகாப்பான உணவு நாட்டு மக்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்கின்ற முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை வகுத்து மக்களின் உணவு கிடைக்கும் அடிப்படை உரிமையை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 109/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அசேதனப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல்,— அசேதனப் பொருட்களை மீள்சுழற்சிக்கு உள்ளாக்குதலும், அசேதனப் பொருட்களின் உபயோகத்தைக் குறைப்பதும், உபயோகத்திலிந்து நீக்கப்படுகின்ற அசேதனப் பொருட்களை சேகரிப்பதற்குமான பொறிமுறையொன்றை அமைத்தல் மற்றும் அசேதனப் பொருட்களை பயன்படுத்துவதற்கான சுற்றாடல் சட்ட, விதிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் சுற்றாடல் முறைமையின் பாதுகாப்பு மற்றும் நன்நிலைத்திருத்தலுக்காக அசேதனப் பொருட்களை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 110/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுதேச மருந்துகள் மற்றும் கைமருந்துகள் பற்றி பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டல்,— ஆரோக்கியமான தேசமொன்றைக் கட்டியெழுப்பல் மற்றும் சுதேச ஆயுர்வேதத்தின் நன்நிலைத்திருத்தலை அடிப்படை நோக்கமாகக் கொண்டு சுதேச மருந்து வகைகள் மற்றும் கைமருந்துகள் பற்றி முறைசார்ந்த விடய விளக்கங்களைக் கொண்ட பாடமொன்றை பாடசாலை பாடத்திட்டத்தில் உள்ளடக்குவதன் மூலம் சுதேச மருந்துகள் மற்றும் கைமருந்துகள் பற்றி பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 111/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தாய், சேய் போஷாக்கின்மையை ஒழித்தல்,— இலங்கையில் எடைகுறைந்த மகப்பேற்று வீதம் 25% எனும் உயர் பெறுமானத்தை கொண்டுள்ளதோடு, அதற்கான பிரதான காரணியாக அமைவது ஊட்டச்சத்துமிக்க உணவுப் பற்றுக்குறையே என்பதால், தாய், சேய் போஷாக்கின்மையை ஒழிப்பதற்குத் தேவையான ஊட்டச்சத்துமிக்க உணவுகளை வறியோர்களுக்கு வழங்குவதை முதன்மையாகக்கொண்ட வேலைத்திட்டமொன்று அமுலாக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 112/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடலைப் பாதுகாப்பதன் மூலம் ஆரோக்கியமான நாடொன்றைக் கட்டியெழுப்புதல்,— இன்று இலங்கையில் சுற்றாடல் மாசடைதல் அதிகரித்துள்ளமையால் நீர் மற்றும் உணவுகளில் கதிரியக்கத் தன்மை அதிகரித்துள்ளதோடு, எதிர்காலத்தில் மனிதனுக்குப் பீடிக்கின்ற ஒருசில நோய்களின் நோய்க் காரணிகளைக்கூட கண்டுபிடிப்பது சிரமமானதாக அமையலாம் என்பதால், இது தொடர்பாக மேலும் ஆய்வு செய்வதற்காக கல்விமான்கள் குழுவொன்றை நியமித்து அறிக்கையொன்றைப் பெற்று, அதன் விதப்புரைகளை அமுலாக்குவதன் ஊடாக நாட்டிலுள்ள மக்களின் ஆரோக்கியம் உறுதிசெய்யப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.113/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டின் பாதுகாப்புக்கு கமத்தொழிலைப் பேணுதல்,— முதலாளித்துவத்தின் மூன்றாவது கட்டமாகிய இரண்டாவது உலக மகா யுத்தத்துக்கு பிற்பட்ட காலத்தில் கமத்தொழில் வாழ்க்கை முறையானது பசுமைப் புரட்சியுடன் முழுமையாகவே மாற்றமடைந்த காரணத்தினால் தற்போதைய உலகளாவிய சமூகம் எதிர்கொண்டுள்ள சுற்றாடல் மாசடைதல், ஆரோக்கியத்தை இழத்தல் மற்றும் தூய்மையான உணவு காணப்படாமை, ஆகிய இடர்காண் நிலைமைகளிலிருந்து இலங்கையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்களை நிலைபேறான கமத்தொழில் பிரயோகங்களுக்கு ஊக்குவிப்பதன் மூலமும் விவசாயிகளைப் பாதுகாக்கும் அரச கொள்கைகளை நாட்டினுள் தாபிப்பதன் மூலமும் நாட்டின் எதிர்காலம் பேணப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 114/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சிக்கலான உலகளாவிய சந்தையின் காரணமாக மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் குறைத்தல்,— உலகமயமாக்கலின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட உலக வர்த்தக முறைகள் மனிதனின் மனதை ஆக்கிரமித்துள்ளதன் காரணமாக அவன் பரம்பரை பரம்பரையாகக் கொண்டு வந்த ஒழுக்க விழுமியங்களும் வளர்ச்சியடைந்த தத்துவக் கருத்துக்களும் மனித மனங்களிலிருந்து பறித்தெடுக்கப்படுதல் தற்காலத்தில் இலங்கையர்களுக்கும் பொதுவானதென்பதால், சந்தைப் பொருளாதாரத்தினுள் கட்டியெழுப்பப்படுகின்ற சிக்கலான வாழ்க்கை முறையையும் அதனைத் தொடர்ந்து எழுகின்ற சிக்கலான சமூகப் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொண்டு அமைதியான வாழ்க்கை முறையொன்றை நோக்கிச் செல்வது எவ்வாறு என்பது பற்றி மக்களை அறிவூட்டுவதற்குரிய வேலைத்திட்டமொன்றும் அறிவார்ந்த கருத்தாடலொன்றும் நாட்டினுள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 115/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைக்குத் தேவையான சீனியை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்தல்,— சீனியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்களை இலங்கை தன்னகத்தே கொண்டிருப்பதால், சிறந்த முகாமைத்துவத்துடன், வினைத்திறனாகவும் திட்டமிட்ட வகையிலும் செயலாற்றி நாட்டுக்குத் தேவையான சீனியை உற்பத்தி செய்வதற்கும் சீனியை சுத்திகரிப்பதற்கும் தேவையான தொழிற்சாலைகளை அரசாங்கம் தாபித்து சீனிக் கைத்தொழிற்துறையை பாதுகாத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 116/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நக்கிள்ஸ் வன ஒதுக்கத்தைப் பாதுகாத்தல்,— இலங்கையின் ஒட்டுமொத்த சுற்றாடல் முறைமையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கூருணர்வுமிக்க சுற்றாடல் முறைமையொன்றாகிய நக்கிள்ஸ் வன ஒதுக்கமானது தற்போது மனித செயற்பாடுகளின் காரணமாக கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதோடு, இன்றைய சந்ததியினருக்கும் அதேபோன்று எதிர்கால சந்ததியினருக்கும் மேற்படி சுற்றாடல் அழிவின் காரணமாக ஆபத்தான நிலைமைக்கு முகங்கொடுக்க நேரிடுவதால், மனிதர்களால் ஏற்படுத்தப்படுகின்ற அச்சுறுத்தல்களை அகற்றி நக்கிள்ஸ் வன ஒதுக்கத்தின் சுயாதீனமான இருப்பை துரிதமாக உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 117/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்குகளை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 118/ '15

கௌரவ புத்திக பத்திறண,— புலமை சார்ந்த வறுமையை ஒழித்தல்,— பௌதீக வர்த்தகப் பொருட்கள் புழங்கும் வேகத்திற்கு நிகராக அறிவு, புலமை மற்றும் மானிட ஒழுக்க விழுமியங்கள் மக்களை சென்றடையாமை காரணமாக அறியாமை தலைதூக்கியுள்ளதன் மூலம், புலமைசார்ந்த வறுமை எமது நாட்டில் காணப்படும் பிரதான பிரச்சினையாக இருந்த போதிலும் அது தொடர்பாக நாட்டினுள் குறைந்தளவு கவனமே செலுத்தப்படுவதனால் நாட்டு மக்களின் புலமைசார்ந்த வறுமையை இல்லாமல் செய்வதற்காக, சகல வயதுப் பிரிவினரும், உள்ளடங்குகின்ற வகையில் முறைசார்ந்த விதத்தில் திட்டமிடப்பட்ட தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 119/ '15

கௌரவ புத்திக பத்திறண,— காலாவதியான ஔடதங்கள் பயன்படுத்தப்படுவதைத் தவிர்த்தல்,— தற்போது இலங்கையில் காலாவதியான ஔடதங்கள் சந்தையிலும் அரச வைத்தியசாலைகளிலும் பாவனைக்கு வரும் ஆபத்து காணப்படுவதனால் அரசின் சகல பிரிவினரும் தலையிட்டு செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரித்து காலாவதியான ஔடதங்களை சந்தையிலிருந்து அகற்றுவதற்கும் இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 120/ '15

கௌரவ புத்திக பத்திறண,— எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுத்தல்,— இலங்கையில் தற்போது இனம்காணப்படாத அண்ணளவாக 3000 எயிட்ஸ் நோயாளர்கள் இருப்பதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளதால், அவர்களை இனம்கண்டு சிகிச்சையளிப்பதற்கும், எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் பயனுறுதியானதும், பொருத்தமானதுமான கருத்திட்டமொன்று துரிதமாக ஆரம்பிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 121/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாடுகளில் பாலியல் துஷ்பிரயோகளுக்கு இலக்காகும் பெண்களுக்கு நிவாரணமளித்தல்,— இலங்கைப் பெண்கள் வீட்டுப் பணிப்பெண் சேவைக்கென வெளிநாடு சென்ற பின்னர் நிகழும் பாலியல் துஷ்பிரயோகங்கள் காரணமாக ஏற்படும் கருத்தரிப்புகளால் இலங்கைச் சமூகத்தில் உருவாகியுள்ள பிரச்சினை நிலைமைகளைத் தீர்ப்பதற்கான ஒழுங்கான முறையியலொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு கல்விமான்கள் மற்றும் குறித்த சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 122/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வன ஒதுக்கங்கள் மற்றும் சரணாலயங்களின் பாதுகாப்பைத் உறுதிப்படுத்துவதற்கான சட்டங்களை இயற்றுதல்,— அண்மைக் காலமாக இலங்கையிலுள்ள வன ஒதுக்கங்கள் மற்றும் சரணாலயங்களின் அழிவு அதிகரித்து வருவதோடு, இலங்கையின் சுற்றாடல் சமநிலைக்கு அதன் மூலம் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதால், இந்த அழிவை நிறுத்துவதற்காக மக்களின் மனப்பாங்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் அதேபோன்று அமுலிலுள்ள சட்ட ஏற்பாடுகளை முறைசார்ந்ததாக மற்றும் கடுமையானதாக இருக்கக்கூடியவாறு திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 123/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பல்வேறு சமய குழுக்களாலும் ஏற்படுத்தப்படுகின்ற சமூகத் தாக்கங்கள் பற்றி ஆய்வு செய்தல்,— பிரதானமான போக்கிலுள்ள சமயக் கருத்தியல்களை விமர்சித்துக் கொண்டு, அச் சமயங்களின் உப பிரிவுகளாக தமது வியாக்கியானங்கள் மற்றும் விளக்கங்களை சமூகமயப்படுத்துகின்றதும், புதிய கருத்தியல்களை முன்வைத்து, அக் கருத்தியல்களை ஏற்றுக்கொள்கின்ற ஆட்களை அணிதிரட்டுகின்றதுமான, சமய மற்றும் வேறு தோற்றங்களில் சமூகமயமாகி இருக்கின்ற குழுக்கள் தொடர்பாக ஆராய்ந்து அவர்களுடைய கருத்தியல்கள், செயற்பாடுகள் மற்றும் சமூகத்திற்கு அவர்களால் ஏற்படுகின்ற தாக்கங்கள் எவ்வாறானவை என்பதைப் பற்றிய மதிப்பீடொன்றை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சமயத் தலைவர்கள் மற்றும் கல்விமான்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்து, அறிக்கையொன்றைப் பெற்று அதன் விதப்புரைகளை செயற்படுத்துதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.124/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயர் தரத்திலான மட்பாண்டங்களை உற்பத்தி செய்தல்,— சமையலின் போது எரிவாயு மற்றும் மின்சாரம் விரயமாகாத வகையில் துரிதமாக வெப்பத்தை உள்ளீர்த்துக்கொள்ளக்கூடிய மட்பாண்டங்களை உற்பத்தி செய்து சந்தைக்கு வழங்குவதற்குத் தேவையான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் மட்பாண்டங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான முறையில் உணவு சமைக்கக்கூடிய இயலுமை தொடர்பாகவும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுகின்ற தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேணடுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 125/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆன்மீக உளவியல் துறைக்கு பௌத்த தர்மத்திலிருந்து செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளல்,— உள்ளம் பற்றிய புத்தபிரானின் ஒருசில விளக்கங்கள் நவீன விஞ்ஞானத்தாலும் கண்டறிய இயலாத அளவுக்கு ஆழமானதாக உள்ளதால், அது பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் நிகழ்காலத்தில் ஆன்மீக உளவியல் துறையில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு பௌத்த தர்மத்தைத் தழுவியதான வரைவிலக்கணங்களையும் தீர்வுகளையும் முன்வைக்கக்கூடிய வகையில், சம்பந்தப்பட்ட துறை பற்றிய பரந்த அறிவுபடைத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கல்விமான்களைக் கொண்ட குழுவொன்றைத் தாபித்து, அதனூடாக பௌத்த தர்மத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிரபல்யப்படுத்தவும், இலங்கையின் நற்பெயரை மேம்படுத்தவும், ஆன்மீக உளவியல் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும் அரசாங்கம் இடையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 126/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கற்றறிவாளர் மத்தியில் தொல்பொருளியல் விடயத்தைப் பிரபல்யப்படுத்துதல்,— கற்றறிவாளர் மத்தியில் தொல்பொருளியல் விடயத்தைப் பிரபல்யப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக பாடசாலைப் பாடத்திட்டத்தில் மேற்படி பாடத்தைச் சேர்த்துக் கொள்வதையும் பல்கலைக்கழகங்களில் தொல்பொருளியல் விடயப்பரப்பை தொடர்ந்தும் விஸ்தரிப்பதற்கான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதையும், அதன் மூலம் தொல்பொருளியல் விடயத்துறையை நாடெங்கினும் பரப்புவதன் மூலம் உருவாகின்ற கல்விமான்களிடமிருந்து சாதகமான சேவையை பெற்றுக்கொள்வதையும் நோக்கமாகக் கொண்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை நீண்டகால ரீதியில் திட்டமிட்டு உருவாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்மென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 127/ '15

கௌரவ புத்திக பத்திறண, — உணவு வகைகளில் உள்ளடங்கியுள்ள நச்சுத்தன்மையைப் பற்றி ஆராய்வதற்காக விஷேட தரநிர்ணய நிறுவனமொன்றை தாபித்தல்,— கமத்தொழிலின்போது பயன்படுத்தப்படும் இரசாயன பதார்த்தங்களின் காரணமாக உணவுப் பொருட்களிலும் நச்சுத்தன்மை கலந்துள்ளதுடன், இது பற்றி கண்டறிவதற்கு ஏற்புடைய தரநிர்ணய நிறுவனமொன்று ஏற்கனவே இலங்கையினுள் நிறுவப்படாமையினால் இவ்விடயத்திற்கென விஷேட தர நிர்ணய நிறுவனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 128/ '15

கௌரவ புத்திக பத்திறண,— யாசகர்கள் யாசிப்பதற்குப் பயன்படுத்துகின்ற சிறுவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல்,— இலங்கையில் யாசகர்கள் சிறுவர்களுடன் யாசிப்பதைத் தடை செய்து, யாசிப்பதற்காகப் பயன்படுத்துகின்ற சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்து, அவர்களை சிறந்த பிரசைகளாக சமூகமயப்படுத்தத் தேவையான தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.129/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையில் பிக்குணீகள் சாசனத்தை இடையறாமல் பேணிவருவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— மஹா பிரஜாபதி கோதமி பிக்குணீயுடன் தொடங்கிய பாரத பிக்குணீகள் சாசனம் சங்கமித்தா பிக்குணீயின் இலங்கை வருகை மூலமாக இலங்கையில் நன்கு தாபிக்கப்பட்டபோதிலும், பிற்காலத்தில் மறைவடைந்தமையால், அண்மைக்காலத்தில் சியாமோபாலீ மஹா நிக்காயவின் ரங்கிரி தம்புலு தரப்பினரால் மீளவும் தாபிக்கப்பட்டதோடு, அவ்விதமாக தாபிக்கப்பட்ட பிக்குணீகள் சாசனத்திற்கு முறைசார்ந்த அங்கீகாரத்தை வழங்குவதற்காக அரசாங்கம் மூன்று பீடங்களையும் சேர்ந்த மகாநாயக்க தேரர்களை உள்ளிட்ட ஏற்புடைய அனைத்து துறைகளினதும் தலைமையில் சரியான உரையாடலை ஆரம்பிக்க வேண்டுமெனவும், அவ்வுரையாடலின் இறுதியில் முறைசார்ந்த வழிமுறையொன்றின் ஊடாக இலங்கையில் பிக்குணீகள் சாசனத்தை இடையறாமல் பேணிவருவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.130/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை பிக்குமார் கூட்டமைப்பினை கட்டமைப்பு ரீதியாக ஒழுங்கமைத்தல்,— இலங்கை பிக்குமார் கூட்டமைப்பில் பிக்குமார்கள் தரப்பிரனர்களாக பிரிந்துள்மையால் கட்டமைப்பு ரீதியாக ஒழுங்கமையாதுள்ளதோடு, அதன் காரணமாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சடங்குமுறைகளில் பிக்குமார்கள் ஏகோபித்த நிலையில் இல்லாமை நாட்டுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதால் ஒட்டுமொத்த பிக்குமார் சமூகத்திலும் ஏகோபித்தநிலையினை ஏற்படுத்தக்கூடிய வேலைத்திட்டமொன்றினை தயாரிக்க அரசாங்கம் தலையீடு செய்யவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.131/'15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுதல்,— இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மக்கள் நேயமிக்கதான முறையில் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான திட்டங்களை தயாரிப்பதற்காக கல்விமான்கள் சபையொன்றை நியமிப்பதற்கும் அவர்களுடைய பரிந்துரைகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தில் நிலவும் ஊழல், மோசடி மற்றும் நிருவாகப் பிரச்சினைகளை தீர்த்து பயனுறுதியான ஒரு தேசிய நிறுவனமாக இயங்குவதற்குத் தேவையான சூழலை அரசாங்கம் தலையீடுசெய்து உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.132/'15

கௌரவ புத்திக பத்திறண,— மருந்தாக்கலுக்கு தேவையான அளவு கஞ்சாவை பயிரிடுவதற்கு சுதேச மருத்துவர்களுக்கு அனுமதி அளித்தல்,— இந்தியாவிலிருந்து இரகசியமான வழிகளின் ஊடாக நாட்டினுள் கொண்டுவரப்படுகின்ற இராசயனப் பொருட்கள் கலந்த கஞ்சாவை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற சுதேச மருந்துகளின் தரம் குறைவடைவதால், ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்கின்றபோது, தமது மருந்துகளின் தரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக, கஞ்சாவை அத்தியாவசிய ஔடதமாக பயன்படுத்தும் அரச அங்கீகாரம் பெற்ற ஆயுர்வேத மருத்துவர்களுக்கு கட்டுப்பாடுகளுடன் கஞ்சா தாவரத்தை பயிரிடுவதற்கு அனுமதி அளிப்பதற்குத் தேவையான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.133/'15

கௌரவ புத்திக பத்திறண,— மரக்கறிச் செய்கையாளர்களுக்கு நியாய விலையை பெற்றுக்கொடுத்தல்,— மரக்கறி மொத்த வியாபாரத்தில் நிகழும் கப்பம் பெறுதல் மற்றும் விலையை தீர்மானித்தல் முதலிய செயற்பாடுகளின் ஊடாக கட்டியெழுப்பப்பட்டுள்ள ஒழுங்கமையப் பெற்ற வர்த்தக தனியுரிமையினால் மரக்கறிச் செய்கையாளர்களுக்கு நியாய விலையை பெற்றுக்கொடுப்பதற்காக இற்றைவரை அமுலாக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் தோல்வியடைந்திருப்பதால், விவாசாயிகளுக்கு நியாய விலையை பெற்றுக்கொடுப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்ட, அழுத்தங்களற்ற சந்தையொன்றினை அரசாங்கத்துறை வர்த்தக நிறுவனங்கள் தலையீடு செய்து உருவாக்கிச் செயற்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.134/'15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் முக்கியத்துவத்தை சமூகமயமாக்கல்,— பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பாடசாலை வான் சாரதிகளுக்கு பிள்ளைகளின் முக்கியத்துவம் பற்றி சமூகவியல் மற்றும் உளவியல் முறையியல்களைக் கொண்டு எளிதாக விளக்கி, நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக பிள்ளைகளை சமூக சவால்களிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது என்பதைப் பற்றிய கலந்துரையாடலொன்றை நடத்துவதற்காக தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.135/'15

கௌரவ புத்திக பத்திறண,— பெண்களுக்கான ஒடுக்குமுறைகளைக் குறைத்தல்,— இன்றைய உலகளாவிய சமூகத்தில் பெண்களுக்கு நேரிடுகின்ற தொல்லைகளான தொழில் மற்றும் பாலியல் சுரண்டலுக்கு ஆளாதல், தனியார் சொத்துரிமை முறை ஆண்களை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளமை, சமமாகக் கருதப்படாமை மற்றும் குடும்ப அமைப்பினுள் சிறைப்பட்டுள்ளமையின் காரணமாக தொழில்பெயர்ச்சிக்கு தடைஏற்படுதல் ஆகிய விடயங்கள் இலங்கைப் பெண்களுக்குப் பொதுவானவையாக உள்ளதால், அவர்களின் நல்லிருப்புக்காக இந்த அசௌகரியமான சூழலை சீராக்கி நிவாரணம் வழங்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.136/'15

கௌரவ புத்திக பத்திறண,— தொல்பொருளியல் திணைக்களத்தை மேம்படுத்தல்,— இலங்கையினுள் அமையப்பெற்றுள்ள தொல்பொருள்களை பேணிக்காப்பதற்கான ஆற்றல் தொல்பொருளியல் திணைக்களத்திடம் இல்லாமைக்கான காரணம் தற்போது நிலவுகின்ற மனித மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறையாகும் என்பதால், கல்விமான்கள் குழுவொன்றின் மூலம் தொல்பொருளியல் திணைக்களத்திலுள்ள குறைபாடுகள் பற்றி ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடுசெய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.137/'15

கௌரவ புத்திக பத்திறண,— தூரப் பயணச் சேவை பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் ஆரோக்கியமான உணவு, குடிபானங்களை பெற்றுக்கொள்வதற்கு வசதி செய்தல்,— தூரப் பயணச் சேவை பேருந்துகள் உணவு, குடிபானங்களை பெற்றுக்கொள்வதற்கு நிறுத்தப்படும் சிற்றுண்டிச் சாலைகளின் தரம் மிகக் கீழ் மட்டத்தில் உள்ளதால் பயணிகளின் ஆரோக்கியத்திற்கு பாதகமானதாயுள்ளதோடு, மேற்படி சிற்றுண்டிச் சாலைகளின் தரத்தை உயர்த்துவதற்காக எப்போதும் பின்னாய்வு செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.138/'15

கௌரவ புத்திக்க பத்திறண,— அரசாங்கத்திற்கு சொந்தமான பெருந்தோட்ட கம்பனிகளை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுதல்,— அரசாங்கத்திற்கு சொந்தமான பெருந்தோட்ட கம்பனிகள் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களாக மாறியுள்ளதால், கல்விமான்கள் குழுவொன்றை நியமித்து மேற்படி நிறுவனங்களின் இலாபகரத்தன்மையை உயர்த்துவதற்குத் தேவையான விதப்புரைகளை தயாரித்து, அவ்விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக மேற்படி கம்பனிகளின் இலாபகரத்தன்மையை உயர்த்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.139/'15

கௌரவ புத்திக பத்திறண,— பாதுகாக்கப்பட்ட வனங்களினுள் இடம்பெறுகின்ற சட்டவிரோதச் செயல்களை நிறுத்தல்,— இலங்கையின் பாதுகாக்கப்பட்ட வனங்களினுள் இடம்பெறுகின்ற சட்டவிரோத பயிர்ச்செய்கை, பல்வேறு நிர்மாணிப்புக்கள், காடுகளை வெட்டித்துப்புரவாக்கல் மற்றும் பாதுகாப்பு வன எல்லைகளை மாற்றியமைத்தல் ஆகியன அழிவுக்கு காரணமாக அமைகின்ற மனித செயற்பாடுகளின் சுற்றிவளைப்புக்கு விசேடமாக வலுவூட்டப்பட்ட பொலிஸ் வனப்பாதுகாப்புப் பிரிவொன்றை தாபிக்க அரசாங்கம் தலையீடுசெய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.140/'15

கௌரவ புத்திக பத்திறண,— பவளப் பாறைகளை பேணிப்பாதுகாத்தல்,— கடல்நீரின் வெப்பநிலை அதிகரித்தல் மற்றும் மனிதசெயற்பாடுகள் காரணமாக பவளப்பாறைகள்அழிவடையும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதால் இலங்கைக் கடல் வலயத்தைச் சூழவுள்ள பவளப்பாறைகளைப் பாதுகாப்பதற்கும், புதிய பவளப்பாறைகள் உருவாவதற்குப் பொருத்தமான சூழல் கட்டமைப்பை உருவாக்குவதற்கும் தேவையான புதிய ஒழுங்குமுறைப்படுத்தல்களை தயார்செய்து அமுல்படுத்துவற்கு அரசாங்கம் தலையீடுசெய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.141/ '15

கௌரவ அப்துல்லா மஹரூப்,— திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம்களை வேறு இடத்திற்கு மாற்றுதல்,— திருகோணமலை கடற்படை முகாம் வடக்கு மற்றும் கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் உள்ள பிரதான இராணுவத் தளமாக இருந்த போதிலும், யுத்த முடிவின் பின் புல்மோட்டை தொடக்கம் லங்காபட்டணம் வரை பல சிறிய கடற்படை மற்றும் இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டுள்ளதோடு அந்த முகாம்கள் தொழில்முயற்சியாண்மை, மீனவர்கள் மற்றும் பொதுமக்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு தடையாக அமைவதனால், மக்களின் சுபீட்சகரமான வாழ்விற்கு உதவும்முகமாக அந்த இராணுவ முகாம்களை வேறு இடத்திற்கு மாற்றுதல் வேண்டுமென இந்தப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.142/ '15

கௌரவ அப்துல்லா மஹரூப்,— ஒலுவில், பாலமுனை துறைமுக நிர்மாணங்களை பூரணப்படுத்தல்,— இந்த மீன்பிடித்துறைமுகம் இப்பிரதேச மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதாலும், 400 மீற்றர் வரை உள்ள குடியிருப்புக் காணிகள் கடல் அரிப்பிற்கு உள்ளாவதாலும், இப்பிரதேசத்திலுள்ள வடிகால் முறைகள் அடைபடுவதாலும், இந்நிலைமையின் விளைவாக சுமார் 10 கிராமங்கள் டெங்கு போன்ற பயங்கரமான நோய்களின் தாக்கத்துக்கு உள்ளாவதாலும் கடல் அரிப்பின் காரணமாக கலங்கரை விளக்கு, துறைமுக விருந்தினர் இல்லம் ஆகியன பாதிப்படையக்கூடிய நிலையிலுள்ளதாலும், ஒலுவில், பாலமுனைத் துறைமுக அலைதாங்கி நிர்மாணப் பணிகள் பூரணப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.143/ ’15

கௌரவ அப்துல்லா மஹரூப்,— கால்நடைகளுக்கு உகந்த மேய்ச்சல் நிலம் ஒதுக்குதல்,— திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 250,000 கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் தேவைப்படுவதாலும் மேய்ச்சலுக்கென ஒதுக்கப்பட்ட நிலம் இம்மாவட்டத்தில் காணப்படாமையால் பால் உற்பத்தியை மேம்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கை பாதிப்புக்கு உள்ளாவதாலும் திருகோணமலை மாவட்டத்தில் உகந்ததொரு மேய்ச்சல் நிலம் அறிவிக்கப்பட்டு ஒதுக்கப்படுவதுடன் வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.144/'15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சமயப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,— நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற துர்நடத்தை மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமான ஒரு நீண்டகாலத் தீர்வாக பாடசாலை மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமை காலையில் அறநெறிப் பாடசாலை, அஹதியா (சமய) பாடசாலை செல்வதைக் கட்டாயப்படுத்தல் உகந்ததாகுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.145/'15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— அரச நிறுவனங்களினால் பொதுமக்களுக்கு ஏற்படும் துர்செயல்கள் பற்றி ஆராய்வதற்கான ஒரு நிறுவனத்தை தாபித்தல்,— பல்வேறுபட்ட சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அரச நிறுவனங்களுக்கு வருகைதரும் பொதுமக்களுக்கு ஏற்படும் முறையற்ற செயல்கள் மற்றும் அநீதிகளை ஆராய்வதற்காகவும், குறித்த அநீதிகளை விசாரிப்பதற்காகவும் சட்டத் தத்துவத்துடன் கூடிய நிறுவனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.146/ ’15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— நாட்டினுள் காணப்படுகின்ற போர்க்கால சிதைவுகளை புனரமைத்து மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தல்,— நாட்டில் நிலவிய யுத்த நிலவரம் காரணமாகவும் இராணுவ நடவடிக்கைகளினாலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் சகல பிரதேசங்களிலும் அழிவடைந்த நிலையிலுள்ள கட்டிடங்கள், நீர்த்தாங்கிகள், புகையிரதங்கள், பஸ் வண்டிகள், விமானங்கள் என்பவற்றை காட்சி நிலையங்களாகவும் பாதுகாப்பு இடங்களாகவும் அரச செலவில் தொடர்ச்சியாகப் பராமரித்துப் பேணி வருதல் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தடையாக இருப்பதனால், நாட்டின் இன்றைய இளைஞர் சந்ததியினர் மற்றும் எதிர்கால சந்ததியினர் மத்தியில் நாட்டில் ஏற்பட்ட போர்க்கால அழிவுகள் தொடர்பான நினைவுகளை இல்லாமல் செய்யும் நோக்கத்துடன் இவ்வாறு அழிவுற்ற இடங்களையும் ஏனைய உடைமைகளையும் மீண்டும் புனரமைத்து மக்களின் நலன்கருதி அவற்றை பாவிப்பதற்கு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 147/15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— யுத்தத்தின்போது உயிரிழந்த மக்களை நினைவுகூர்வதற்காக நினைவுத்தூபியொன்றை அமைத்தல் மற்றும் நினைவுகூர்வதற்கான பொதுத் திகதியொன்றைக் குறித்தொதுக்குதல்,— வட மாகாணத்தில் கடந்த பல தசாப்தங்களாக காணப்பட்ட யுத்த நிலவரம் நீங்கி அமைதியானதொரு வாழ்க்கை முறையில் மக்கள் பிரவேசித்துள்ளதோடு, கடந்த காலப்பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலைமையின் காரணமாகவும், யுத்த நிலவரம் காரணமாகவும், படுகொலைக்கு உள்ளான அனைத்து இன, மத மற்றும் சமூகங்களைச் சேர்ந்த, சகல மொழிகளையும் பேசுகின்ற மக்களை இலங்கையர்களாக நினைவுகூர்ந்து, அம்மக்கள் தாய் நாட்டுக்காக மேற்கொண்ட தியாகங்களுக்கு மதிப்பளிப்பதற்காக, வட மாகாணத்தின் ஓமந்தைப் பிரதேசத்தில் பொருத்தமானதோர் இடத்தில் “நினைவுத்தூபியொன்றை”அமைப்பதற்கும், மேற்படி யுத்த நிலவரம் காரணமாக உயிரிழந்த சகல இன, மத மற்றும் மொழிகளைப் பேசுகின்ற மக்களை நினைவுகூர்வதற்காக பொருத்தமான திகதியொன்றை பெயரிட்டு ஒவ்வோர் ஆண்டும் அத்தினத்தைக் கொண்டாடுவதற்கும்அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.148/'15

கௌரவ பிரசன்ன ரணவீர,— அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் கணிப்பிடப்படும் 40% கழிப்பனவு எல்லையை கொடுப்பனவுகளுடன் கூடிய மொத்தச் சம்பளத்திலிருந்து கணிப்பிடல்,— அரச நிதி ஒழுங்குவிதிக் கோவைக்கமைய கடன் பெறும்போது 40% கழிப்பனவு எல்லை அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுவதால், அரச ஊழியர்களுக்கு அவசர தேவையொன்றின்போது அல்லது வீட்டுத் திருத்தவேலைக்கு அரசாங்க வங்கியொன்றிலிருந்து அல்லது அரச துணை நிறுவனமொன்றிலிருந்து கடன் தொகையொன்றை பெறுவதற்கு மேற்படி காலங்கடந்த சட்டம் இடையூறாக இருக்கின்ற போதிலும், ஏழாண்டு ஆதனக் கடனை பெறுகையில் ஐந்தாண்டு கால நிரந்தர ஓய்வூதியத்துடன் கூடிய சேவைக்காலம் கருத்திற் கொள்ளப்படுவதால், மேற்படி கழிப்பனவு எல்லை ஏற்புடையதாகாதென்ற போதிலும், அரச சேவைக்கு புதிதாக இணைகின்ற அரச ஊழியரொருவருக்கு மேற்படி கழிப்பனவு எல்லை காரணமாக கடன் தொகையொன்றைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருப்பதால் 40% கழிப்பனவு எல்லை கொடுப்பனவுகளுடன் கூடிய மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.149/'15

கௌரவ ஹேசா விதானகே,— ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பாக உரிய தரத்தை ஏற்படுத்துதல்,— இலங்கையில் பேணிவரப்படுகின்ற ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் பெரும்பாலானவை தகைமையுடைய நிருவாகிகள் இல்லாமை, பொருத்தமற்ற இடங்களில் பேணிவரப்படுகின்றமை, பிள்ளைகளுக்கு பொருத்தமற்ற பாடவிடயப் பரப்புகள் கற்பிக்கப்படுதல் மற்றும் உரிய தரத்தை கொண்டிராத அதேவேளை, அவற்றை மேம்படுத்தும் பொருட்டு மாகாண சபைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகளும் திருப்திகரமாக இல்லாததால், எதிர்கால சிறுவர் சந்ததியினருக்கு பெரும் பணியாற்றுவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக தேசிய வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.150/'15

கௌரவ ஹேஷா விதானகே,— பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கான ஒழுங்கான முறையியலொன்றை தயாரித்தல்,— இலங்கையில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகின்றபோது இதுவரை காலமும் நடைமுறையிலிருந்த கட்சி, நிற பாகுபாட்டு முறையை புறக்கணித்துவிட்டு, நியாயத்தை நிலைநாட்டுவதற்காகன ஒழுங்கான முறையியலொன்றை திட்டமிட்டு, அதனை ஒரு கொள்கையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அரசியல்வாதிகளின் முன்னிலையில் பட்டதாரிகள் இழிவாக நடத்தப்படாத வகையில் செயலாற்றுதல் வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.151/'15

கௌரவ ஹேஷா விதானகே,— தோட்டங்களைச் சார்ந்து வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்,— தோட்டங்களைச் சார்ந்து தமிழ் மக்கள் வாழும் சுற்றுச்சூழலில் மின்சாரம், நீர் வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன், இந்நிலைமையானது பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும், இம்மக்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதால், இந்த லயன் வீட்டுக் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, இதற்குப் பதிலாக புதிய முறைசார்ந்த தனி வீட்டுத் திட்டமொன்றை தயாரிப்பதற்குத் தேவையான துரித வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.153/ ’15

கௌரவ லக்கி ஜயவர்தன,— அரசியல் காரணங்களின் அடிப்படையில் வாழ்வின் எழுச்சி பயன்கள் இழக்கச் செய்யப்பட்டுள்ளவர்களுக்கு துரித நிவாரணம் வழங்கல்,— நாடு முழுவதிலும் அமுல்படுத்தப்பட்டுள்ள வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாழ்வின் எழுச்சி கொடுப்பனவுகள் கிடைக்க வேண்டிய பெரும் எண்ணிக்கையான வறியவர்கள் அரசியல் காரணங்களின் அடிப்படையில் மேற்படி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்களை இழந்துள்ளதன் காரணமாக, எந்தவொரு பேதமுமின்றி மேற்படி கொடுப்பனவுகள் கிடைக்க வேண்டிய வறியவர்கள் அனைவருக்கும் துரிதமாக பெற்றுக்கொடுக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.154/ ’15

கௌரவ லக்கி ஜயவர்தன,— கண்டி மாவட்டத்தில் தொடர்மாடி வீடமைப்புத் திட்டமொன்றை ஆரம்பித்தல்,— கண்டி மாவட்டத்தில் நிலவுகின்ற காணி மற்றும் வீட்டுப் பற்றாக்குறைக்குத் தீர்வொன்றாக கண்டிப் பிரதேசத்தில் அமைந்துள்ள அரசாங்க பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு உரித்தான பயிர்ச்செய்கை செய்யப்படாதுள்ள காணிகளைத் தேர்ந்தெடுத்து, தொடர்மாடி வீடமைப்புத் திட்டமொன்றை உருவாக்கி வீடுகள் இல்லாத கண்டி மாவட்ட நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு துரிதமாக வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென இப்பராளுமன்றம் கருதுகின்றது.

பா.155/ '15

கௌரவ லக்கி ஜயவர்தன,— 12 ஆண்டுகள் இராணுவ கடமைகளில் ஈடுட்டிருந்த முப்படைவீரர்களுக்கு ஓய்வூதியம் பெற்றுக்கொடுத்தல்,— இலங்கை முப்படைச் சேவையில் 22 ஆண்டுகள் பூர்த்தியடைந்த பின்னர் ஓய்வு பெறக்கூடிய வழிமுறையொன்று நடைமுறையில் உள்ளதால், வடக்கு கிழக்கில் இராணுவ நடைவடிக்கைக் கடமையில் 12 ஆண்டு காலம் தொடர்ச்சியாக சேவையாற்றிவிட்டு இச்சேவைகளிலிருந்து நீங்கியுள்ளவர்கள் தற்சமயம் மிக நிர்க்கதி நிலையில் உள்ளதால் மேற்படி முப்படை மற்றும் பொலிஸ் சேவையில் கடமையாற்றியவர்களுக்கு பகுதியளவு ஓய்வூதியமொன்றை பெற்றுக்கொடுக்கும் வழிமுறையொன்றை விரைவில் தயாரித்து இவர்களுக்கு நிவாரணம் வழங்குவது உசிதமாகுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.156/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— கண்டி நகரில் காணப்படும் வாகன நெரிசலை குறைத்தல்,— இலங்கையின் இரண்டாவது தலைநகரான கண்டி நகர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்களின் சுற்றுலா நிலையமாக காணப்படுவதாலும், கண்டி நகருக்கு அன்றாடம் பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகை தருவதுடன் இம்மக்கள் கண்டி நகரிலும் அண்மித்த வீதிகளிலும் உள்ள அதிக வாகன நெரிசல் காரணமாக பெரும் சிரமத்திற்கு உள்ளாவதாலும், கண்டி நகரில் வாகன நெரிசலை குறைப்பதற்காக துரித தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.157/'15

கௌரவ லக்கி ஜயவர்த்தன,— கண்டி நகரத்தில் முஸ்லிம் ஆண்கள் பாடசாலையொன்றை ஆரம்பித்தல்,— கண்டி மாவட்டத்தில் பெருமளவிலான முஸ்லிம் மக்கள் வாழ்வதுடன், கண்டி நகரை அண்மித்தாக முஸ்லிம் ஆண்கள் பாடசாலையொன்றை அமைக்க வேண்டுமென்பது இப்பிரதேச மக்களினது நீண்ட கால கோரிக்கையாகவும் அமைந்துள்ளமையால், மிக விரைவில் கண்டி நகரத்தில் முஸ்லிம் ஆண்கள் கல்லூரியொன்றை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.158/'15

கௌரவ லக்கி ஜயவர்த்தன,— கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பிரபல்யமிக்க பாடசாலைகளின் முதலாம் தரத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக புதிய கட்டடங்களை நிர்மாணித்தல்,— கண்டி நகருக்கு அண்மையிலுள்ள பிரபல்யமிக்க பாடசாலைகளின் முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு பெரும் தொகையானோர் விண்ணப்பித்த போதிலும், இப்பாடசாலைகளில் இடவசதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பிள்ளைகளை அனுமதித்தல் மிகவும் சிரமமானதாக அமைந்துள்ளமையால், கண்டி நகரை அண்மித்துள்ள முதன்மையான பாடசாலைகளுக்கு, முதலாவது தரத்துக்கான வகுப்புக்களை நடாத்துவதற்காக புதிய கட்டடங்களை மிக விரைவில் நிர்மாணித்துக்கொடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா 159/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— கண்டிபல்லேகலே சுதந்திர வர்த்தக வலயத்தை முறைசார்ந்த விதத்தில் விரிவுபடுத்தல்,— கண்டி மாவட்டத்தில் தொழில் வாய்ப்பின்றி பெருமளவிலான இளைஞர் யுவதிகள் இருக்கின்ற காரணத்தினால், இவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை துரிதமாக வழங்குவதற்காக கண்டி பல்லேகலே பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு சுதந்திர வர்த்தக வலயங்களையும் முறைசார்ந்ததாக அமைத்து அதிகமானோருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுப்பதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா 160/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— மலைநாட்டு கிராமிய புனர்வாழ்வளிப்பு ஆணைக்குழுவை மீள தாபித்தல்,— ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் நிர்க்கதி நிலைக்குள்ளான மலைநாட்டில் வாழும் மக்களுக்கு நிவாரணமளிக்கும் பொருட்டு தாபிக்கப்பட்டிருந்த மலைநாட்டு கிராமிய புனர்வாழ்வளிப்பு ஆணைக்குழு கடந்த ஆட்சிக் காலத்தின்போது செயலிழக்கச் செய்யப்பட்டிருந்த காரணத்தினால் மலைநாட்டு மக்களுக்கு நேர்ந்துள்ள அநீதிகளுக்கு நீதி வழங்குவதற்காக மலைநாட்டு கிராமிய புனர்வாழ்வளிப்பு ஆணைக்குழுவை மீள முறைசார்ந்த விதத்தில் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.161/ '15

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— அகில இலங்கை மட்டத்தில் வெற்றிகளைப் பெற்றுள்ள விளையாட்டு வீரர்களுக்கு கல்வித்துறையில் நியமனம் வழங்குதல்,— அகில இலங்கை பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகள்/ இளைஞர் கழக விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் அகில இலங்கை மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற வீரர்களையும் குழுப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ள குழுக்களில் இடம்பெறும் விளையாட்டு வீரர்களையும் கல்வி அமைச்சில் விளையாட்டுத் துறை ஆசிரியர்களாகவும், விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களாகவும் பயிற்றுவித்து நியமனம் வழங்கும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.162/ '15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— வட மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இலங்கை கல்வி நிருவாக சேவையின் விசேட பதவியணி வெற்றிடங்களை மூப்புரிமை மற்றும் திறமையை அடிப்படையாகக் கொண்டு நிரப்புதல் அத்துடன் போட்டிப் பரீட்சையிலிருந்து விடுவித்து III ஆம் தரத்திற்கு நியமித்தல்,— வட மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இலங்கை கல்வி நிருவாக சேவையின் விசேட பதவியணி வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பில் சரியான பகுப்பாய்வை மேற்கொண்டு இப்பதவிகளுக்குரிய கடமைகளை நிறைவேற்றி வருகின்ற இலங்கை அதிபர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களின் மூப்புரிமையையும், திறமையையும் கவனத்திற்கொண்டு இவர்களை இலங்கை கல்வி நிருவாக சேவை போட்டிப் பரீட்சையிலிருந்து விடுவித்து கல்வி நிருவாக சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.163/ '15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— வட மாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளில் பதில் கடமையாற்றும் அதிபர்களை பாடசாலை அதிபர்களுக்கான போட்டிப்பரீட்சையில் இருந்து விடுவித்து அந்த உத்தியோகத்தர்களை பாடசாலை அதிபர் சேவையின் தரம் III இற்கு நியமித்தல்,— வட மாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளில் நீண்ட காலமாக சேவையாற்றி வருகின்ற இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த பதில் கடமையாற்றும் அதிபர்களின் சேவை மூப்பு மற்றும் திறமை என்பற்றை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை பாடசாலை அதிபர் சேவையின் போட்டிப் பரீட்சையிலிருந்து விடுவித்து அந்த உத்தியோகத்தர்களை இலங்கை அதிபர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.164/ '15

கௌரவ (டாக்டர்) ஏ.ஆர்.ஏ. ஹபீஸ்,— ஊடகவியலாளர்களுக்கு வீடமைப்பு திட்டங்களிலிருந்து வீடுகளை பெற்றுக்கொடுத்தல்,— அச்சு, இலத்திரனியல் ஊடகத் துறைகளில் முழு நேர அடிப்படையில் பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவையாற்றியுள்ள பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் அரசாங்கத்தினால் அமுலாக்கப்படும் வீடமைப்புத் திட்டங்களில் வசிப்பதற்கான வீடுகளை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.165/ '15

கௌரவ (டாக்டர்) ஏ.ஆர்.ஏ. ஹபீஸ்,— அரசாங்க பாடசாலைகளில் ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஊழிர்கள் கடமை நேரத்தில் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துவதை கட்டுப்படுத்தல்,— அரசாங்க பாடசாலைகளில் ஆசிரியர்கள் வகுப்பறைகளிலும், கற்பிக்கும் சந்தர்ப்பங்களிலும் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுவதுடன் பாடசாலையின் ஏனைய ஊழியர்களும் கடமைக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தை கையடக்கத் தொலைபேசிப் பாவனைக்காக கழிப்பதால், பாடசாலை வளாகத்தில் கடமை நேரத்தில் ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஊழிர்கள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துவதை கட்டுப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.167/'15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— ஹஜ் யாத்திரை சட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்,— இலங்கையிலிருந்து வருடம்தோறும்ஹஜ் யாத்திரையில் ஈடுபடுகின்ற ஹஜ் யாத்திரிகர்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும், அது தொடர்பாக நிறுவனக் கட்டமைப்பொன்றை தாபித்து சட்ட ஏற்பாடுகளை வகுப்பதற்காகவும் அரசாங்கத்தினால் "ஹஜ் யாத்திரை சட்டம்" ஒன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

---

## 2016 பெப்புருவரி 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

83/ '15

கௌரவ புத்திக பத்திறண,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் வசிக்கின்ற தமிழ் பௌத்தர்கள் தொடர்பான தொகை மதிப்பொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில் மேற்படி தமிழ் பௌத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) வட மாகாணத்தில் வசிக்கின்ற தமிழ் பௌத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேலே குறிப்பிட்டவாறான தொகை மதிப்பொன்று நடத்தப்பட்டிராவிடின் அத்தகைய ஒன்றினை நடத்துவாரா;

(v) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் தமிழ் பிக்குமார்கள் உள்ளனரா;

(ii) ஆமெனில், அவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்த மக்களுக்கு தமது சமய நடவடிக்கைகளில் ஈடுபடவும் அறநெறிக் கல்வியைப் பெறவும் அவசியமான வசதிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது எவ்விதமாக;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

187/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆம் திகதியன்று காலை அலரி மாளிகை வளாகத்தில் அரச விரோத சூழ்ச்சியொன்று இடம்பெற்றதாக தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த அரசியல்வாதிகள் தெரிவித்திருந்தார்கள் என்பதையும்;

(ii) அவ்வாறானதொரு சூழ்ச்சி இடம்பெற்றதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் அரசாங்கத்தின் ஊடக பேச்சாளரான அமைச்சர், அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போதும் பாராளுமன்ற சபா மண்டபத்திலும் தெரிவித்திருந்தார்கள் என்பதையும்;

(iii) மேற்படி சூழ்ச்சி தொடர்பாக கண்டறிவதற்கு இலங்கைப் பொலிசாரினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதென்பதையும்;

(iv) ஏற்புடைய விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்ட விடயங்களுக்கமைய முன்னாள் சனாதிபதி அல்லது முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சனவரி மாதம் 09 ஆம் திகதியன்று எவ்விதமான அரச விரோத சூழ்ச்சியையும் மேற்கொள்ளவில்லை என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்ட பொலிஸ் விசாரணையின் பெறுபேறு யாதென்பதையும்;

(ii) மேற்படி விசாரணைக்கமைய குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு பொலிசாரினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் என்பதையும்;

(iv) மேற்படி விசாரணைக்கமைய, 2015 சனவரி 09 ஆம் திகதியன்று காலை அலரி மாளிகையில் எவ்விதமான அரச விரோத சூழ்ச்சியும் நடைபெறவில்லை என அறிவிப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

189/'15

கௌரவ (டாக்டர் ) நளிந்த ஜயதிஸ்ஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு, கொம்பனித்தெருவில் அமைந்துள்ள பாதுகாப்புச் சேவைப் பாடசாலை சார்பில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கல்வி அமைச்சு வருடாந்தம் செலவிட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) இப்பாடசாலை மாணவர்களிடமிருந்து பணம் சேகரிப்பதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதா;

(iii) ஆமெனில், அத்தகைய அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா;

(iv) மாணவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணத்தை வைப்புச்செய்துள்ள வங்கிக்கணக்கு யாது;

(v) இங்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கொன்று பேணப்பட்டு வருகின்றதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

205/ ’15

கௌரவ எம். எச். எம் சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மடவளை கடைவீதி, பங்களாகெதர, 21 ஆம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஏ.எம். சஹாப்தீன், க/மதீனா தேசிய பாடசாலையில் ஆரம்பப் பிரிவில் தொழிலாளராக 2006 ஆம் ஆண்டு தொடக்கம் பணிபுரிகின்றார் என்பதையும்;

(ii) இவரின் சேவை மற்றும் சேவைக்காலத்தை கவனத்திற்கொண்டு அமய அல்லது தற்காலிக அடிப்படையில் சேவையில் அமர்த்துவதற்காக உரிய ஆவணங்கள் அடிக்கடி மத்திய மாகாண கல்வித் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட போதிலும், இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iii) இறுதியாக, 2014.11.18ஆம் திகதிய விண்ணப்பப்படிவம், அதிபர்/வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திரு. சஹாப்தீனுக்கு அமய அல்லது தற்காலிக அடிப்படையில் தொழிலாளர் பதவியொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

226/ ’15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த அரசாங்கத்தின் கீழ் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடிகளையும் ஊழல்களையும் புலனாய்வு செய்வதற்காக விளையாட்டுத் துறை அமைச்சரால் திரு. ரவி அல்கமவின் தலைமையின் கீழ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில் அக்குழு உறுப்பினர்களின் பெயர்கள் யாவை;

(iii) அக்குழு நியமிக்கப்பட்ட திகதி யாது;

(iv) சம்பந்தப்பட்ட குழுவின் அறிக்கையைத் தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு எவ்வளவு;

(v) அவ்வறிக்கை தயாரித்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளதா; ஆமெனில் அத்திகதி யாது;

(vi) மேற்படி அறிக்கையின் மூலம் இனங்காணப்பட்ட கடுமையான முறைகேடுகள் ஊழல் மற்றும் மோசடிகள் யாவை;

(vii) மேற்படி குழு அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா;

(viii) சம்பந்தப்பட்ட குழு அறிக்கையில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டவர்கள் இருப்பின் அவர்களின் பெயர்கள் யாவை;

(ix) அவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

274/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2014.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.10.31 ஆம் திகதி வரை மற்றும் 2015.01.01 ஆம் திகதி தொடக்கம் 2015.10.31 ஆம் திகதி வரையான கால கட்டங்களில் அறிக்கையிடப்பட்ட,

(i) படுகொலைகள்;

(ii) கற்பழிப்புகள்;

(iii) ஆட்கடத்தல்கள்;

(iv) கப்பம் பெறல்கள்;

(v) கொள்ளைகள்;

எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

286/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மழைக் காலங்களில் கொலொன்னாவை பிரதேசத்தில் பல துணை வீதிகள் நீரில் மூழ்குகின்றதென்பதையும், இதன் காரணமாக பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை ஸ்தம்பிதமடைகின்றதென்பதையும் அவர் அறிவாரா?

(ஆ) (i) கொலொன்னாவைத் தொகுதியில் அவ்வாறு நீரில் மூழ்குகின்ற துணை வீதிகள் மற்றும் பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(ii) அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொடுத்து மக்கள் வாழ்க்கையை மேம்படுத்துகின்ற வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி பிரதேசங்களின் கால்வாய்களை துப்புரவு செய்து, ஒழுங்காக நீர் வடிந்தோடுவதற்காக கால்வாய்களை அமைப்பதற்கான திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

310/ '15

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகலை மாவட்டத்தின் வெல்லவாய தேர்தல் தொகுதியில் காணப்படுகின்ற காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) தற்போது அவ்வனைத்துக் காணிகளுக்குமான நிலஅளவை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், நிலஅளவை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) வெல்லவாய தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் மக்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

(v) ஏற்கனவே சட்ட ரீதியான காணி உரிமையைக் கொண்டிராத ஆட்களுக்கு சட்ட ரீதியான காணியுரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

319/ '15

கௌரவ ஜயந்த சமரவீர,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.11.15 திகதியன்று உள்ளவாறு இலங்கையினுள் அரசுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் குத்தகைக்கு வழங்கியுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசுக்குச் சொந்தமான ஒவ்வொரு காணியின் பெயர் மற்றும் அளவு, பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்ட வாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு காணியின் பெயர், அளவு மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காலம், வருடாந்த குத்தகைகத் தொகை மற்றும் காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்டம் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) இன்றளவில் அரசுக்குச் சொந்தமான காணிகளை விற்பதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) விற்பதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ள காணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி காணிகள் விற்கப்படும் அல்லது குத்தகைக்கு வழங்கப்படும் நபர்கள் யாவர் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

327/ '15

கௌரவ பிமல் ரத்நாயக்க,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2011 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்துள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

329/ '15

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1980 காலப்பகுதியில் கிண்ணியா பிரதேசத்தில் சுற்றுலா நீதிமன்றமொன்று இயங்கி வந்ததென்பதையும், பின்னர் பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக அது மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக மூடப்பட்ட குச்சவெளி சுற்றுலா நீதிமன்றம் கடந்த அரசாங்க காலத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், அச்சந்தர்ப்பத்தில் கிண்ணியா சுற்றுலா நீதிமன்றத்தை மீண்டும் ஆரம்பிப்பது நிராகரிக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் கிண்ணியா சுற்றுலா நீதிமன்றத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

331/ '15

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2014 ஆம் ஆண்டு கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆங்கில ஆசிரியர் பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பொருட்டு;

(i) விண்ணப்பப்பத்திரம் கோரல் பிரகடனப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுதித் திகதி யாதென்பதையும்;

(iii) பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்ட திகதிகள் யாவையென்பதையும்;

(iv) குறிப்பிட்ட பரீட்சை நடாத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி பரீட்சைக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருந்த பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறவில்லையென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை வழங்கும்போது தகைமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருப்பின், அத்தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் கிடைக்காதிருக்க முடியுமா என்பதையும்;

(iii) தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இரத்தினபுரி மாவட்டத்தின் முதுன்மங்கட, உடவலவயில் வசிக்கும் திருமதி. கே.வீ. அசலா செவ்வந்திக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டை கிடைக்கவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) உரிய அனுமதி அட்டை கிடைக்காததன் காரணமாக இவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) இது தொடர்பாக இவர் மேன்முறையீடொன்றும் அடிப்படை உரிமை மீறல் பற்றிய முறைப்பாடொன்றும் சமர்ப்பித்திருந்தாலும், அதற்கான தீர்வு கிடைக்காதிருந்தமைக்கான காரணம் யாதென்பதையும்;

(vi) இவருக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி தொடர்பாக முறைசார்ந்த விசாரணையொன்றை மேற்கொண்டு நீதி நிறைவேற்றப்படுமா என்பதையும்;

(vii) குறித்த விசாரணையை ஆரம்பிப்பதற்கும் முடிவுறுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

337/ '15

கௌரவ நாமல் ராஜபக்ஷ,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 சனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கை போக்குவரத்துச் சபையினுள் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்களின் எண்ணிக்கை யாது ;

(ii) அரசியல் பழிவாங்கல்களை சீராக்கும் பொருட்டு, சேவையிலிருந்து நீக்கப்பட்ட குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள், அவர்கள் வகித்த பதவிகளில் மீள சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்களா;

(iii) நிதி மோசடி, ஒழுக்கத்துக்கு முரணான செயல்கள் உள்ளிட்ட பாரதூரமான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது, 2015 சனாபதித் தேர்தலின் பின்னர் அரசியல் விதப்புரைகளின் பிரகாரம் அவர்கள் மீண்டும் இலங்கை போக்குவரத்து சபையில் இணைக்கப்பட்டு அல்லது சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்களா;

(iv) ஆமெனில், இவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

341/ '16

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ள மற்றும் மண்சரிவு ஏற்படக்கூடிய ஆபத்துள்ள தோட்டங்களில் வசிக்கின்ற குடும்பங்களை மீள குடியமர்த்துவதற்காக புதிய காணிகள் இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி காணிகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iii) மண்சரிவு காரணமாக இடம்பெயர்ந்துள்ள குடும்பங்கள் சம்பந்தமாக இது வரை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) மண்சரிவு ஆபத்து ஏற்பட்டுள்ள தோட்டங்களில் வசிக்கின்ற குடும்பங்கள் சம்பந்தமாக இது வரை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

85/ '15

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு, லும்பிணி வித்தியாலயத்தின் லும்பிணி அரங்கு பழுதடைந்து உள்ளது என்பதையும்;

(ii) அதைத் திருத்தியமைப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iii) மேற்படி அரங்கு பழுதடைந்து காணப்படுவது குறித்த பாடசாலைக்கும் அதேபோன்று கலைத்துறைக்கும் பாரிய இழப்பாக அமைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) லும்பிணி அரங்கு திறந்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அன்று தொடக்கம் இன்று வரை அது எத்தனை தடவைகள் மறுசீரமைக்கப்பட்டது என்பதையும்;

(iii) மேற்படி அரங்கு இறுதியாக மறுசீரமைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) லும்பிணி அரங்கினை மறுசீரமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென செலவிடும் தொகை யாதென்பதையும்;

(iii) குறித்த மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2016 பெப்புருவரி 25, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

72/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) தெற்கு, கட்டுநாயக்க – கொழும்பு மற்றும் வெளிச் சுற்றுவட்ட அதிவேக நெடுஞ்சாலைகள் காரணமாக வயற் காணிகள், ஈர நிலங்கள் மற்றும் வெள்ளப் பெருக்குச் சமவெளிகள் ஆகியவற்றுக்கு சேதமேற்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணமாக அதிவேக நெடுஞ்சாலைகளை சுற்றிலுமுள்ள மக்கள் வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

(iii) மேற்படி சுற்றாடல் சேதமானது முழு நாட்டினதும் சுற்றாடல் சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அதிவேக நெடுஞ்சாலைகள் காரணமாக வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள பிரதேசங்களை அத்தகைய அச்சுறுத்தலிலிருந்து மீட்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) சேதத்துக்குள்ளான சுற்றாடல் முறைமைகளை பேணுவதற்கு அவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே (அ)(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலுடன் தொடர்புடைய ஏனைய அமைச்சுக்களுடனான ஒருங்கிணைந்ததொரு நிகழ்ச்சித்திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய நிகழ்ச்சித்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

191/'15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 – 2014 வரை இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் வினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள புதிய பஸ்வண்டிகளின் எண்ணிக்கை வருடாந்தம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) பஸ்வண்டிகளை கொள்வனவு செய்வதற்காக வருடாந்தம் செலவிடப்பட்ட பணத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புதிய பஸ்வண்டிகள் வழங்கப்பட்ட டிப்போக்கள் யாவையென்பதையும்;

(iv) லங்கா அசோக் லேலண்ட் கம்பனியிலிருந்து WP NB-6028, WP NC-6049, WP NB-6051, WP NB-6057, WP NB-6067, WP NB-6671, WP NB-7750, WP NB-7751, WP NB-7752, WP NB-7967, WP NC-0653, WP NC-1307, WP NC-1746 மற்றும் WP NC-2016 ஆகிய இலக்கங்களுடைய 14 பஸ்வண்டிகளை கொள்வனவு செய்ய செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அ(iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள 14 பஸ்வண்டிகளும் தற்போது இ.போ.ச. வசம் உள்ளனவா என்பயையும்;

(ii) ஆமெனில், மேற்படி பஸ்வண்டிகள் உரித்தாயுள்ள டிப்போக்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

219/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 சனவரி மாதம் 01 ஆம் திகதியளவில் இந்நாட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த அரச சார்பற்ற அமைப்புகள் (NGO) மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் (INGO) யாவையென்பதையும்;

(ii) மேற்படி அமைப்புகளின் முகவரிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) 2015.01.01 ஆம் திகதி முதல் 2015.11.01 ஆம் திகதி வரை இந்நாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புகள் (NGO) மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் (INGO) யாவையென்பதையும்;

(ii) மேற்படி அமைப்புகளின் அமைப்பாளர்களது இணைப்புத் தகவல்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி அமைப்புகளுக்கு,

(i) 2000.01.01 ஆம் திகதி முதல் இற்றைவரை கிடைத்துள்ள வருடாந்த நிதியுதவிகள் எவ்வளவென்பதையும்;

(ii) இவ்வுதவிகளை வழங்கியுள்ள வெளிநாட்டு அரசுகள் அல்லது அமைப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிதியுதவிகளை வழங்கியுள்ள வெளிநாட்டு அரசுகள் மற்றும் அமைப்புகள் சம்பந்தப்பட்ட நிதியுதவிகளை வழங்கியுள்ளதன் குறிக்கோள்கள் யாவையென்பதையும்;

ஒவ்வொரு அமைப்பு சார்பிலும் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

229/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை வங்கியில் உள்ளக உத்தியோகத்தர் பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கான (2014) போட்டிப் பரீட்சையில் இடம்பெற்ற முறைகேடுகள் மற்றும் அநீதிகள் தொடர்பாக அவர் அறிவாரா?

(ஆ) (i) 2014.06.08 ஆந் திகதி களனிப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட மேற்படி போட்டிப் பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் சித்தியடையாதவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) பரீட்சையில் சித்தியடைந்த அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) දුර/2002 சுற்றறிக்கையின் படி இலங்கை வங்கியின் அனைத்து உள்ளக பதவியுயர்வுகளின் முறையியலொன்று தீர்மானிக்கப்பட்டிருக்கையில் அனைத்துப் பாடங்களுக்கும் 40 என்ற புள்ளிகளின் வரையறை 50 ஆக அதிகரிக்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) இது தொடர்பாக பரீட்சார்த்திகள் முன்கூட்டியே விழிப்புணர்வூட்டப் பட்டிருந்தார்களா என்பதையும்;

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையியலுக்கமைய இந்த பரீட்சை நடத்தப்பட்டுள்ளதென உடன்படுகின்றீரா என்பதையும்;

(iv) பரீட்சைப் பெறுபேறுகளை வழங்குவதற்கு 5 மாதங்கள் கடந்துள்ளதுடன் பெறுபேறுகளை மீண்டும் மதிப்பிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(v) பாதிக்கப்பட்ட இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் சார்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

266/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைப் புகையிரத சேவைக்கு சொந்தமான நாவலப்பிட்டிய புகையிரதக் களஞ்சியத்தின் ஒரு பகுதியில் மமா/கம்/அல்சபா முதனிலைப் பாடசாலை பேணிவரப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) பயன்படுத்தப்படாதுள்ள புகையிரதக் களஞ்சியக் கட்டடத்தில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பேணிவரப்படுகின்ற மேற்படி பாடசாலையை நிரந்தரமாக பேணிவருவதற்கு ஏற்ற விதத்தில் மேற்படி கட்டடத்தை அமைத்துக் கொள்வதற்கு அக் காணியை மத்திய மாகாண கல்வித் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

298/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.12.08 ஆம் திகதி தொடக்கம் 2015.01.08 ஆம் திகதி வரை சனாதிபதித் தேர்தலின் போது போலி ஆவணம் தயாரித்தல் தொடர்பில், அரசியல்வாதிகளுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி முறைப்பாடுகள் யாருக்கெதிராக முன்வைக்கப்பட்டிருந்தன;

(iii) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் கைது செய்தல் நடைபெற்றதா;

(iv) ஆமெனில், கைது செய்யப்பட்டோர் யாவர்;

(v) மேற்படி ஒவ்வொரு முறைப்பாடு தொடர்பான புலனாய்வு நடவடிக்கைகளின் தற்போதைய முன்னேற்றம் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

316/ ’15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— உயர்கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 100 நாள் கருத்திட்டத்தின் மூலம் அனைத்துத் தேர்தல் தொகுதிகளிலும் வீதி அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட 30 மில்லியன் பணத்தொகை அவ்வாறே வழங்கப்படுமா என்பதையும்;

(ii) இன்றேல், இவ்வாண்டில் வழங்கப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) ரூபா 30 மில்லியனுக்காக முன்மொழியப்பட்ட வீதிகளை இவ்வாண்டில் பூர்த்தி செய்ய முடியாத போது எதிர்வரும் ஆண்டில் பூர்த்தி செய்ய வாய்ப்பளிக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2016 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் துணை வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக பணம் ஒதுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அந்தப் பணத்தொகையை ஒதுக்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் அளவுகோல்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

330/ ’15

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) பெரும்பான்மையாக முஸ்லிம் மக்கள் வசிக்கும் திருகோணமலை மாவட்டத்தில்,

(i) மாவட்ட செயலகத்தில் பொறுப்புவாய்ந்த பதவிகளில் பணியாற்றுவதற்கு முஸ்லிம் உத்தியோகத்தர்கள் இல்லையென்பதையும்;

(ii) குச்சவெளி மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலகங்களில் எந்தவொரு பதவியிலும் முஸ்லிம் உத்தியோகத்தர்கள் இல்லையென்பதையும்;

(iii) கடந்த அரசாங்கத்தினால் திருகோணமலை மாவட்ட செயலகம் இராணுவமயமாக்கப்பட்டு முஸ்லிம் உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக கடுமையான போக்கு கடைபிடிக்கப்பட்டமையால் அவ்வுத்தியோகத்தர்கள் மாவட்ட செயலகத்திலிருந்து விலகிச் சென்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ்,

(i) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் ஏதேனும் பொறுப்புமிக்க பதவிக்கு குறைந்தது ஒரு முஸ்லிம் உத்தியோகத்தரையாவது நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) குச்சவெளி மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலகங்களில் ஏதேனுமொரு கடமைப் பொறுப்புள்ள பதவிக்கு முஸ்லிம் உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

338/ '15

கௌரவ நாமல் ராஜபக்ஷ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) மகிந்தோதய 1000 பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை மாவட்டத்தில்,

(i) நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட மகிந்தோதய விஞ்ஞான கூடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள மகிந்தோதய விஞ்ஞான கூடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள மகிந்தோதய விஞ்ஞான கூடங்களில் மாணவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) தொழில்நுட்ப பாடத் துறைக்காக மகிந்தோதய தொழில்நுட்பவியல் விஞ்ஞான கூடங்களை (மூன்று மாடிக் கட்டடங்கள்) நிர்மாணிப்பதன் கீழ் அம்பாந்தோட்டை மாவட்டத்தில்,

(i) நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட மகிந்தோதய தொழில்நுட்பவியல் விஞ்ஞான கூடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள மகிந்தோதய தொழில்நுட்பவியல் விஞ்ஞான கூடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள மகிந்தோதய தொழில்நுட்பவியல் விஞ்ஞான கூடங்களின் மாணவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

361/ '15

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய அரசாங்கத்திலுள்ள மொத்த இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு தனித்தனியான அமைச்சு அலுவலகங்கள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனின், மேற்படி அலுவலகங்கள் அமைந்துள்ள இடங்களின் நிரந்தர முகவரிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

143/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் முதியோர் குடிசனத்தொகை அதிகரித்து வருகின்றதென்பதையும்;

(ii) எதிர்காலத்தில் இந்த நிலைமை சமூகத்துக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் 70 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி சனத்தொகை பெண்கள் மற்றும் ஆண்கள் என்ற ரீதியில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) முதியோர் சனத்தொகை மொத்த குடிசனத்தொகையில் எத்தனை சதவீதம் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி சனத்தொகையில் ஓய்வூதியம் பெறும் ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) ஓய்வூதியம் பெறாதவர்களின் நலன்புரிக்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) அதிகரித்து வரும் முதியோர் சனத்தொகையின் வாழ்க்கைத் தரத்தை முகாமை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

192/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹோமாகம, தியகம, மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்திற்குரிய நிலப்பகுதியின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலப்பகுதி சொந்தமாக இருந்த அரசாங்க நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிலப்பகுதி, விளையாட்டுத்துறை அமைச்சினால் அல்லது வேறு அரச நிறுவனத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கு ஏற்புடைய ஆவணங்களை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) தற்போது விளையாட்டு மைதானத்தின் நிர்வாகம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்பவர்கள் யாவரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(ii) அரசாங்கம் செலவிட்டுள்ள பணத்தொகை மற்றும் தனியார் நன்கொடைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) இதற்கு நிதி ஒதுக்கீடு செய்த அமைச்சுகள் யாவையென்பதையும்;

(iv) நிர்மாணிப்புகளுக்காக பணம் வழங்கியுள்ள தனியார் நன்கொடையாளர் களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) விளையாட்டு மைதானத்தை விளையாட்டுப் பணிகளுக்காக வழங்குதல் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் இற்றைவரை அறவிடப்பட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு வருடத்திற்கும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ள கணக்குகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்துடன் சம்பந்தப்பட்ட "விளையாட்டு அபிவிருத்தி மன்றமொன்று" உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் எந்த அமைச்சரால், எந்தத் திகதியில் பெறப்பட்டதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

299/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உத்தியோகத்தர் ரூபா ஐம்பதாயிரம் செலுத்தும் அடிப்படையில், 2014 ஆம் ஆண்டு அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2014 ஆம் ஆண்டில் பணம் செலுத்தப்பட்டு, 2015.10.31ஆம் திகதி வரை மோட்டார் சைக்கிள்கள் கிடைக்கப்பெறாத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 சனாதிபதி தேர்தல் காலத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டதன் பிரரகாரம், மோட்டார் சைக்கிள்களுக்காக அரச உத்தியோகத்தர்களால் செலுத்தப்பட்ட ரூபா ஐம்பதாயிரம் பணத் தொகை அல்லது அதில் ஒரு பகுதி அரசாங்கத்தால் திருப்பி உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் பணம், திருப்பிச் செலுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்ற திணைக்களங்கள் யாவையென்பயையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

342/ '15

கௌரவ ஜயந்த சமரவீர,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையின் லொத்தர் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு பணிகளுக்காக சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிறுவனங்களிலிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் பொருட்டு விலை மனுக்களை சமர்ப்பித்த சந்தை மேம்பாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு லொத்தர் சபை மற்றும் லொத்தர் வகைக்கேற்ப தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) விலை மனுக்களை சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு லொத்தர் சபை மற்றும் லொத்தர் வகைக்கேற்ப தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) லொத்தர் மேம்பாட்டு பணிகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு லொத்தர் சபை மற்றும் லொத்தர் வகைக்கேற்ப தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களை தெரிவு செய்கின்றபோது பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட தகைமைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

343/'15

கௌரவ கனக ஹேரத்,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காப்பட் இடப்பட்டு அபிவிருத்தி செய்வதற்காக முன்மொழியப்பட்டிருந்த மாவனெல்லை நகரம் தொடக்கம் ஹெம்மாத்தகம ஊடாக கம்பளை வரையிலான 26 கி.மீ. நீளமான வீதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஹிஜ்ராகம அல்-அஸ்ஹர் வித்தியாலயம் வரை, அதாவது 15 கி.மீ.வரை வரையறுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) 40 அடி அகலத்தில் நிர்மாணிக்கப்படுவதற்காக முன்னர் திட்டமிடப்பட்டிருந்த மேற்படி வீதியின் அகலமானது 34 அடிகள் வரை வரையறுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இவ்வாறு மேற்படி வீதியின் ஆரம்பத் திட்டம் மாற்றப்பட்டதன் மூலம், கொழும்பு – கண்டி பிரதான வீதியில், மாவனெல்லையிலிருந்து ஹெம்மாத்தகம வீதி ஆரம்பமாகும் இடத்தில் (S.O.ஹோட்டலுக்கு பக்கத்திலுள்ள சந்தி) தினசரி காணப்படுகின்ற வாகன நெரிசலுக்கு தீர்வுகள் கிடைக்குமா என்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி இடத்தில் ஏற்பட்டுள்ள வாகன நெரிசலைக் குறைப்பதற்கு மாற்றுத் திட்டமொன்றை முன்வைப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2016 பெப்புருவரி 26, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

77/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.07.01 ஆம் திகதி முதல் இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்டுள்ள உணவுச் சுவையூட்டிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு சுவையூட்டிக்கும் தடைவிதிக்கப்படுவதற்கான காரணம் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தடைசெய்யப்பட்ட சுவையூட்டிகள் போன்றே அஜினமொட்டோ அல்லது மொனோசோடியம் க்ளூடமேட் (MSG) சுவையூட்டியும் மனித உடலுக்கு பாதகமானதென்பதையும்;

(ii) இது புற்றுநோய் மற்றும் நரம்பு நோய்கள் உள்ளிட்ட பாரதூரமான நோய்களுக்கு காரணமாக அமைகின்றதென்பதையும்;

(iii) ஒரு வருடத்தில் 2200 மெட்ரிக் தொன்னை விட அதிகளவில் மேற்படி சுவையூட்டி இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மொனோசோடியம் க்ளூடமேட் பாவனையை தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

228/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவை இந்நாட்டுக்கு பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்கூட்டிய பிரச்சார மற்றும் ஏனைய பணிகளுக்காக கடந்த அரசாங்கத்தின் இடையீட்டுடன் சேகரித்துள்ள பணம் எவ்வளவு;

(ii) மேற்படி பணம் முறையற்றவகையில் பாவிக்கப்பட்டுள்ளதா;

(iii) இந்த விளையாட்டு விழாவை இலங்கைக்கு பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் CWG Hambanthota 2018 (Pvt.) Ltd. எனும் கம்பனியொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததா;

(iv) இந்த கம்பனியின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு இலக்கம் யாது;

(v) அக்கம்பனிக்கு விளையாட்டுத்துறை அமைச்சினால் வழங்கப்பட்ட பணத்தொகை யாது;

(vi) அதற்கு மேலதிகமாக பணம் வழங்கிய ஏனைய நிறுவனங்கள் மற்றும் ஆட்களின் பெயர்கள் யாவை;

(vii) மேலே குறிப்பிடப்பட்டவர்களால் வழங்கப்பட்ட பணம் மற்றும் காசோலைகளின் பற்றுச்சீட்டுகள் அல்லது காசோலை இலக்கங்கள் தனித்தனியாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பணம் வங்கியிலிடப்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக உள்ள ஆவணங்கள் யாவை;

(ii) வங்கியிலிடப்பட்டிராத பணக் கிடைப்பனவுகளை பற்றுச்சீட்டு இலக்கங்களுடன் சமர்ப்பிப்பாரா;

(iii) பணம் வங்கியிலிடப்படாமைக்கான காரணங்கள் யாவை; மேற்படி பணம் எவருடைய பொறுப்பில் உள்ளது;

(iv) சேகரிக்கப்பட்ட மொத்தப் பணத்தில் தற்போது கணக்கில் எஞ்சியுள்ள தொகை எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

289/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் (வக்ப் பிரிவில்) பதிவுசெய்யப்பட்டுள்ள முஸ்லிம் பள்ளிவாசல்கள், ஜும்மா பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், சாவியாக்கள், தர்காக்கள் போன்ற அறக்கட்டளை நிறுவனங்களுக்கு சொந்தமான அசையாச் சொத்துக்கள் சம்பந்தமான தரவுகள் அடங்கிய பதிவகமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பதிவகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) மேற்படி பதிவகத்தின் தரவுத்தளத்தில் பதியப்பட்டுள்ள வக்ப் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கேற்ப யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வக்ப் சொத்துக்கள் பற்றிய தரவுத்தளமொன்று இல்லாவிடின், தரவுத்தளமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

300/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 சனவரி மாதம் 09 ஆம் திகதியன்று உள்ளவாறு இலங்கைக்கு சொந்தமாகவிருந்த வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கத்தின் அளவு எத்தனை டொலர்கள் என்பதையும்;

(ii) 2015 நவெம்பர் மாதம் 26 ஆம் திகதியன்று உள்ளவாறு இலங்கைக்கு சொந்தமாகவிருந்த வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கத்தின் அளவு எத்தனை டொலர்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கம் இந்தளவிற்கு வேகமாக வீழ்ச்சியடைவதற்கு காரணம் யாதென்பதையும்;

(ii) வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கத்தை பாதுகாப்பதற்கும் அதிகரிக்கச் செய்வதற்கும் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

320/' 15

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பதலே நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு நீர் பெற்றுக்கொள்ளப்படும் களனி கங்கையில் கடல் நீர் கலப்பதை தடுப்பதற்காக கொங்கிரீட் அணைக்கட்டொன்று அமைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி கொங்கிரீட் அணைக்கட்டுக்கு 500 மீற்றர் கீழாக மணல் மூடைகளாலான அணைக்கட்டொன்று அமைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மணல் மூடைகளாலான அணைக்கட்டை நிர்மாணிப்பதற்கு வருடாந்தம் கேள்விப்பத்திரம் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென ஆண்டொன்றுக்கு ஒதுக்கப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நிரந்தர கொங்கிரீட் அணைக்கட்டு இருக்கின்ற நிலையில், மணல் மூடைகளாலான அணைக்கட்டை நிர்மாணிப்பதற்கு வருடாந்தம் பெருமளவு பணத்தை செலவிடுவதற்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

321/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க தகவல் திணைக்களத்தில் விஷேட ஆராய்ச்சிப் பிரிவொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் கல்வித்தகைமைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டில் வடக்குப் பிரதேசம் சார்ந்ததாக 02 வெளிக்கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி ஆய்வுகளை, திணைக்களத்தின் விசேட ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ள முடியாமல் போனதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி 02 வெளிக்கள ஆய்வுகளையும் மேற்கொண்ட தனியார் நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி இரண்டு ஆய்வுகளுக்காகவும் மேற்படி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நிறுவனம் கேள்விப்பத்திரம் கோரப்பட்டதன் மூலம் தெரிவு செய்யப்பட்டதா என்பதையும்;

(vi) ஆமெனில், விண்ணப்பித்திருந்த ஏனைய நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் யாவை என்பதையும்;

(vii) விலை மனுக்களை கோருகின்றபோது மற்றும் மதிப்பீடு செய்கின்றபோது மேற்படி நிறுவனங்களின் ஆராய்ச்சியாளர்களின் தகைமைகள் மற்றும் நிறுவனங்களின் பூர்வாங்கத் தகைமைகள் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டதா என்பதையும்;

(viii) மேற்படி இரண்டு ஆய்வு அறிக்கைகளை அடிப்படையாக கொண்டு அரசாங்க தகவல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

362/ '15

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியங்களின் மூலம் அமுல்படுத்தப்பட்ட பிரதானமான வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களில் வெளிநாட்டு நிதியங்கள் மற்றும் உள்நாட்டு நிதியங்கள் மூலம் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறித்த கருத்திட்டங்களைக் கண்காணிப்பதற்காக கருத்திட்ட ஒப்படைப்பு அடிப்படையில் ஆலோசகர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆலோசகர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி ஆலோசகர்களுக்கு இருக்க வேண்டிய தொழில்சார் மற்றும் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) இவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற மாதாந்த சம்பளம் மற்றும் வேறு கொடுப்பனவுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) மேற்படி சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக அரசாங்கத்தினால் வருடாந்தம் செலவிடப்பட்ட மொத்தத் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

81/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கும் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கும் சொந்தமான தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலை களின் பெயர்கள், அமைந்துள்ள பிரதேசங்கள் மற்றும் பயிரிடப்பட்டுள்ள பயிர் வகைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தோட்டம் மற்றும் தொழிற்சாலையைச் சார்ந்ததாக சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கடந்த 5ஆண்டுகளினுள் மேற்படி தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இலாபம் ஈட்டிய மற்றும் நட்டம் அடைந்த தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி காலகட்டத்தில் மேற்படி ஒவ்வொரு தோட்டமும் அல்லது தொழிற்சாலையும் பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) நட்டமடைந்த அரச தோட்டங்களுக்கு திறைசேரியிலிருந்து பணம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், வழங்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணம் வழங்கப்பட்ட தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகள் யாவையென்பதையும்;

(iv) நட்டமடைகின்ற அரச தோட்டங்களை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

238/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான GB-2865 இலக்கத்தைக் கொண்ட டிபெண்டர் வாகனத்தை 03 மாத குறுகிய கால பாவனைக்காக பெற்றுக்கொண்ட முன்னாள் அமைச்சரொருவரும் இன்னொரு முன்னாள் அமைச்சரும் 06 ஆண்டுகள் அனுமதியின்றி பயன்படுத்திவிட்டு பின்னர் அதன் நான்கு சக்கரங்கள் உட்பட பல பாகங்களை அகற்றிய நிலையில், வாகன அடிச் சட்டத்தை மாத்திரம் கடந்த 2015 ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தலின் பின்னர் முன்னறிவிப்பின்றி, இடர் உதவி வண்டியில் ஏற்றிக் கொண்டு வந்து அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் வளவில் கைவிட்டுச் சென்றுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் உத்தியோகபூர்வ ரீதியில் GB-2865 இலக்கத்தைக் கொண்ட டிபெண்டர் வாகனம் வழங்கப்பட்டிருந்த அமைச்சரின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி வாகனம் அனுமதியின்றி எவ்வளவு காலம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இது தொடர்பாக நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி வாகனத்தின் பாகங்கள் அகற்றப்பட்டதால் ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நட்டத்தை அறவிடுவதற்கு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(vi) மேற்படி அரச சொத்தின் குற்றவியல் கையாடல் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(vii) இது தொடர்பாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

296/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில், மெததும்பர பிரதேச சபை மூலம் 'புரநெகும' கருத்திட்டத்தின் கீழ் வியாபாரிகளுக்கான வர்த்தக அங்காடி ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில்,மேற்படி வர்த்தக அங்காடியின் விற்பனை நிலையங்களை வழங்கும் பொருட்டு பின்பற்றப்படுகின்ற நடைமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அன்று இலங்கை மகாவலி அதிகார சபைக்கும், இன்று பிரதேச சபைக்கும் வரி செலுத்தி நடைபாதை வியாபாரிகளாக புடவை விற்பனையில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு பாரிய அநீதி ஏற்பட்டுள்ளதால், குறித்த விற்பனை நிலையங்களை வழங்கும் போது உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 மற்றும் 5 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள அறிவுரைகளை கவனத்தில் கொள்ள ஆலோசனை வழங்குவாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

301/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) உலக சந்தையிலிருந்து மசகு எண்ணெய் கொள்வனவு செய்யப்பட்ட நாள் தொடக்கம் உள்நாட்டு சந்தையில் நுகர்வோருக்கு விற்கப்பட்டும் வரை செலவாகும் காலம் எவ்வளவு;

(ii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் 2014 நவெம்பர் மாதத்திலும் 2015 ஒகத்து மாதத்திலும் மசகு எண்ணெய் கொள்வனவு செய்யப்பட்ட மாதாந்த சராசரி விலை எவ்வளவு;

(iii) உலக சந்தையிலிருந்து பெற்றோல் கொள்வனவு செய்யப்பட்ட நாள் தொடக்கம் உள்நாட்டு சந்தையில் நுகர்வோருக்கு விற்கப்பட்டும் வரை செலவாகும் காலம் எவ்வளவு;

(iv) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் 2014 நவெம்பர் மாதத்திலும் 2015 செத்தெம்பர் மாதத்திலும் பெற்றோல் கொள்வனவு செய்யப்பட்ட மாதாந்த சராசரி விலை எவ்வளவு;

(v) 2015 சனவரி 09 ஆம் திகதி மற்றும் 2015 ஒற்றோபர் 09 ஆம் திகதியில் இலங்கையில் ஒரு லீற்றர் பெற்றோலின் சில்லறை விலை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) உலக சந்தையில் பெற்றோலிய விலை வீழ்ச்சியடைவதன் நன்மை நுகர்வோருக்கு வழங்கப்படாதது ஏனென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

325/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையினுள் வாகனங்களுக்கு புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களை வழங்கும் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களை வழங்குவதற்கான அதிகாரம் பெற்ற நிறுவனங்கள் யாவை;

(iii) மேற்படி நிறுவனங்கள் புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களை எந்த ஆண்டிலிருந்து வழங்குகின்றன;

(iv) புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களை வழங்கத் தொடங்கிய வருடம் முதல் ஒவ்வொரு நிறுவனமும் உழைத்த வருமானம் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(v) ஒவ்வொரு வாகனத் தொகுதிக்கும் ஏற்ப புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களை வழங்குகையில் அறவிடப்படும் கட்டணங்கள் யாவை;

(vi) மேற்படி நிறுவனங்கள் புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களுக்காக அரசாங்கத்துக்கு செலுத்தும் பணத்தொகை ஒவ்வொரு வாகனத் தொகுதிக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(vii) மேற்படி நிறுவனங்கள் புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களை வழங்குவதற்கு ஆரம்பித்த வருடம் முதல் அரசாங்கத்துக்கு செலுத்தியுள்ள பணத்தொகை ஒவ்வொரு நிறுவனத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(viii) மேற்படி நிறுவனங்கள் அரசாங்கத்துக்கு நிலுவைப் பணத் தொகைகளை செலுத்த வேண்டியுள்ளனவா;

(ix) ஆமெனில், குறித்த நிலுவைப் பணத்தொகை ஒவ்வொரு நிறுவனத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(x) மேற்படி நிறுவனங்களின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மற்றும் அவர்களது விலாசங்கள் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

346/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுநலவாய அரசுத் தலைவர்களின் மாநாட்டு (CHOGM) க்கு இணையாக சூரியவெவ பிரதேசத்தில் டென்னிஸ் மைதானமொன்றை அமைக்க திட்டமிடப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென தெரிவுசெய்யப்பட்ட காணியின் உரிமையாளர் யார் என்பதையும்;

(iii) மேற்படி காணிக்கென இதுவரை செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு ஒரு தனியாருக்குச் சொந்தமான காணிக்கு எந்த அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(v) மேற்படி காணிக்கான விலைமதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(vi) மேற்படி டென்னிஸ் மைதான நிர்மாணப் பணிகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(vii) அதன் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(viii) இன்றேல், செலுத்தப்பட்ட பணத்தை மீளப்பெற நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

345/ '16

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ள மற்றும் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ள தோட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தோட்டங்கள் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தோட்டங்களில்,

(i) மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மண்சரிவு காரணமாக இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

ஒவ்வொரு தோட்டத்தின்படி தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

353/ '15

கௌரவ விஜித ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பளை கல்வி வலயத்துக்கு சொந்தமான, மாவத்துறை கிராமத்தில் அமைந்துள்ள, வெலிகங்க கனிஷ்ட பாடசாலை மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதென்பதையும்;

(ii) இப்பாடசாலை மலை உச்சியில் அமைந்துள்ளமையால், பாடசாலை மாணவர்கள் சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தை ஒரு நாளைக்கு இரு தடவைகள் நடந்து செல்ல வேண்டி நேர்ந்துள்ளதென்பதையும்;

(iii) பற்றைக் காடுகளைக் கொண்ட ஒரு பாழடைந்த வீதியில் சுடுகாட்டினையும் கடந்து செல்ல வேண்டி நேரிடுதல் போன்ற சிரமங்கள் காணப்படுகின்றமையின் காரணமாக, ஆசிரியர்கள்கூட இப் பாடசாலையில் சேவையாற்ற வருவதற்கு பின்வாங்குகிறார்கள் என்பதையும்;

(iv) இத்தகைய கஷ்ட நிலமைகளைத் தவிர்த்து, பாடசாலையை வேறொரு இடத்தில் அமைப்பதற்காக, பெருந்தோட்ட அமைச்சுக்கு சொந்தமான, கட்டிடமொன்றுடன் கூடிய ஒரு காணியை கல்வி அமைச்சு கொள்வனவு செய்துள்ளதென்பதையும்;

(v) மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியும் கட்டடமும் உரித்தாகின்ற தோட்டத்தின், முகாமையாளரின் அழுத்தம் காரணமாக புதிய கட்டடத்தில் இப்பாடசாலையை ஆரம்பித்தல் தடைப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் நன்மை கருதி இந்தப் பாடசாலையை மூடுவதற்கு இடமளிக்காது, மேலே (அ)(v) இல் குறிப்பிடப்பட்டுள்ள அழுத்தங்களையும் தடுத்து, இதனை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில், இதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?